# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 27 திங்கட்கிழமை (13.11.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 348


### ரவிராஜ் படுகொலையைக் கண்டித்து

# இன்று கொழும்பில் நடக்கும் பேரணியில் மூவின மக்களும் ஒன்று திரள்வர்

கொழும்பு,நவ.13

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்எம்.பி. நடராஜா ரவிராஜ் சுட்டுக்கொல்லப்பட்டமையைக் கண்டித்து இன்று கொழும்பில் நடைபெறும் பேரணியிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் இவற்றில் மூவின மக்களும் ஒன்றாக அணி திரள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு பொரளை கனத்தையில் இருந்து ஆரம்பமாகும் இந்தக் கண்டனப் பேரணி கொழும்பு மாநகரசபையில்வந்துநிறைவுறும்.அதனையடுத்து மாநகரசபை முன்றிலில் பிற்பகல் மூன்று மணிக்கு கண்டனப் பொதுக்கூட்டம் ஒன்று இடம்பெறும்.

ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய, ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சி தவிர்ந்த ஏனைய அரசியல் கட்சிகள், தொழிற்சங்க சம்மேளனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சிவில் அமைப்புகள் போன்றவை ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருக்கும் இந்நிகழ்வில் மூவினங்களையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிகழ்வை யுத்தத்திற்கு எதிரான முன்னணி கூட்டிணைக்கின்றது.

கொழும்பைச் சேர்ந்தவர்கள் மாத்திரமன்றி நாட்டின் பல இடங்களையும் சேர்ந்தவர்கள் இந்தக் கண்டன நிகழ்வில் கலந்துகொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்புவாழ் மூவின மக்கள் அனைவரும் இன்று தங்களின் வர்த்தக நிலையங்களை அரை நாளாவது மூடிவிட்டு இந்நிகழ்வில் கலந்துகொள்ளவேண்டும் என்றும் வீடுகளில் வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட வேண்டும் என்றும் பேரணி ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த நிகழ்வின்மூலம் அரசிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் ஒரு கடுமையான செய்தி சொல்லப்படும் என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பேரணி மற்றும் கண்டனக் கூட்டம் தொடர்பான ஏற்பாடுகள் குறித்து அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பொன்று யுத்தத்திற்கு எதிரான முன்னணியின்

(08ஆம் பக்கம் பார்க்க)

# வாகரையில் மீண்டும் நேற்று மோதல்கள்!

## அச்சத்தில் மக்கள் இடம்பெயர்வு

மட்டக்களப்பு,நவம்பர்13

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் மீண்டும் நேற்று அதிகாலை கடும் மோதல்கள் வெடித்துள்ளன.

வாகரைப் பகுதியைநோக்கி இராணுவத்தினர் வாழைச்சேனை, மாங்கேணி, புனாணை, கரடிக்குளம் ஆகிய நிலைகளில் இருந்து ஆட்லறி மற்றும் பல்குழல் எறிகணைத் தாக்குதல்களை ஒரே சமயத்தில் நடத்தியதாக விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கஜுவத்தையிலும் மாங்கேணியிலும் விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள் மீது நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் ஆட்லறி மற்றும் எறிகணைத் தாக்குதல்களை நடத்தியதாக தேசிய பாதுகாப்பு ஊடகமையம் தெரிவித்தது.

நேற்று ஞாயிறு அதிகாலை 3.30 மணிக்கு ஆரம்பித்த கடும் மோதல்கள் சுமார் ஐந்து மணி நேரம் நீடித்ததாகத் தகவல்கள் தெரிவித்தன.

எனினும் பாதிக்கப்பட்டோர் விவரங்கள் நேற்றுமாலை வரைகிடைக்கவில்லை.

இராணுவத்தினர் நடத்திய தாக்குதல்களைத் தொடர்ந்து வாகரை, பனிச்சங்கேணி மற்றும் ஆலம்குளம் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு நேற்று மீண்டும் இடம்பெயர்ந்தனர். (08ஆம் பக்கம் பார்க்க)



கொழும்பு ஏ.எவ்.ரோமண்ட் மலர்சாலையில் வைக்கப்பட்டிருந்த மாமனிதர் ரவிராஜின் பூதவுடலுக்கு நேற்று ஜனாதிபதியின் பாரியார் அஞ்சலி செலுத்தினார்.

# கோண்டாவிலில் கடத்தப்பட்ட மாணவன் உட்பட இரண்டுபேர் சடலங்களாக மீட்பு!

யாழ்ப்பாணம்,நவ.13

கோண்டாவில் கிழக்கில் நேற்றுமுன்தினம் இரவு கடத்தப்பட்ட இருவர் யாழ். ஆனைப்பந்தியில் சடலமாக நேற்றுக் காலை மீட்கப்பட்டனர்.

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்தவர்களான ரவி ரஜீவன்(வயது 14), செல்வகுமார் ஜீவா(வயது 23) ஆகியோரின் சடலங்களே மீட்கப்பட்டுள்ளன.

இவர்களில் ரவி ரஜீவன் கோண்டாவில் பரம்சோதி வித்தியாலயத்தில் தரம் 11 இல் கல்வி பயிலும் மாணவன் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கோண்டாவில் கிழக்கில் வசிக்கும் இவர்களது வீட்டுக்கு நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் வந்த இனந்தெரியாதவர்கள் இருவரையும் கடத்திச் சென்றனர் என்றும் அவர்களது உறவினர்கள் விசாரணையில் தெரிவித்தனர்.

யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

விசாரணையின் பின் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தி உறவினர்களிடம் சடலங்களை ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (1-68-203)

# பிரிட்டிஷ் பிரதமரின் பிரதிநிதி இவ்வாரம் கொழும்பு வருகை

கொழும்பு,நவ.13

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயரின் சிறப்புப் பிரதிநிதியாக வட அயர்லாந்தைச் சேர்ந்த போல் மேர்பி இந்த வாரம் இலங்கை வரவுள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான அமைதிப் பேச்சுகளை மீண்டும் அதற்குரிய தடத்துக்குக் கொண்டுவரும் முயற்சிகளுக்கு உதவுவதற்கே இப்பிரதிநிதியை பிரிட்டிஷ் பிரதமர் கொழும்புக்கு அனுப்புகின்றார் எனக் கூறப்படுகிறது.

கடந்த ஓகஸ்ட் மாதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இங்கிலாந்து சென்றிருந்தபோது ரொனி பிளயரைச் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பையடுத்து தனது சிறப்புப் பிரதிநிதியை இலங்கைக்கு

(08ஆம் பக்கம் பார்க்க)

# மாமனிதர் ரவிராஜ் எம்.பியின் பூதவுடல் நாளை விமானம் மூலம் குடாநாட்டுக்கு

## புதனன்று சாவகச்சேரியில் இறுதிச்சடங்கு

கொழும்பு, நவ.13

மாமனிதர் நடராஜா ரவிராஜின் பூதவுடல் நாளை செவ்வாய்க்கிழமை விமானம் மூலம் யாழ்ப்பாணம் எடுத்துவரப்படவுள்ளது.

தற்போது கொழும்பு பொரளையிலுள்ள ஏ.எவ்.றேமண்ட் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டுள்ள அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்[illegible] பிற்பகல் 2 மணி தொடக்கம் [illegible] கொழும்பு நகர மண்டபத்தி[illegible]ன் அஞ்சலிக்காக வைக்கப்[illegible] ([illegible] பக்கம் பார்க்க)

# நேற்றுவரை 20 பேர் கைது 43 பேரிடம் வாக்குமூலம்!

கொழும்பு, நவ.13

கூட்டமைப்பு எம்.பி. நடராஜா ரவிராஜ் படுகொலை தொடர்பாக இதுவரை 20 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் 43 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்றும் - குற்றப் புலனாய்வுப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

"இக்கொலை தொடர்பாக பல முக்கியமான தகவல்கள் கிடைத்துள்ளன. கொலையாளிகள் பயணம் செய்த ஒட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் தொடர்பாகவும்

(08ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.உணவுக் கப்பலுக்கு பாதுகாப்பு ஐ.நாவின் முடிவு இன்று தெரியவரும்

கொழும்பு,நவ.13

யாழ். குடாநாட்டுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்குவது குறித்து ஆராய இலங்கை வந்துள்ள ஐ.நா. அதிகாரிகள் இன்று அனர்த்த முகாமைத்துவ மற்றும் [illegible] தொடர்பான அமைச்சர் மஹிந்த சமரசிங்கவிடம் தமது முடிவைத் தெரிவிக்கவிருக்கின்றனர்.

ஐ.நா. உலக உணவுத்திட்டத்தைச் சேர்ந்த நான்கு அதிகாரிகள் கடந்த வாரம் இலங்கை வந்து சேர்ந்தனர். இவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்தனர். காங்கேசன்துறை, பருத்தித்துறை துறைமுகங்களையும் சென்று பார்வையிட்டனர். அங்கு யாழ். அரச அதிபர் கே.கணேஷையும் சந்தித்துப் பேச்சு நடத்தினர். அங்கிருந்து நேற்று கொழும்பு திரும்பிய இந்த அதிகாரிகள் இன்று அமைச்சர் மஹிந்த சமரசிங்கவை சந்திப்பர். (08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## திருமதி தங்கம்மா ஸ்ரீபன்

மண்ணில் 01.09.1925 விண்ணில் 14.10.2006



நிலையற்ற வாழ்வு தனில்
நிலையான இடம் தேடி ஒரு மாதம்
ஆனதுவோ!
உண்ணுகின்றோம்! உறங்குகின்றோம்!!
விண்ணதை கண் பார்த்து
தேடுகின்றோம் - மீண்டும்
உம் வரவிற்காக....
ஈரவிழி காயவில்லை உன் சுவடு
பார்க்கையில்
ஓயாத துயராச்சு உம் பிரிவு எமக்கு
கண்ணீரால் நாம் சொரியும் பூக்கள்
எந்நாளும் நிறைந்திருக்கும்
உம் பாதத்தில்.
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

இன்று (13.11.2006)திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

*70/6 பாண்டியன் தாழ்வு,*
*யாழ்ப்பாணம்.* (55164) **குடும்பத்தினர்.**

# 90ஆம் நாள் நினைவஞ்சலியும் கண்ணீர் அஞ்சலியும்



எமது வித்தியாலயத்தின் ஆசிரியர் திரு. ரகுமார் அவர்களின் பாசமிகு தந்தை

## சுப்பையா இராசேந்திரம்(துரை)

அவர்கள் 12.08.2006 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தமையை அறிந்து மனம் வருந்துகின்றோம் அமரரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்
*கிளி/ உருத்திரபுரம் மகாவித்தியாலயம், உருத்திரபுரம்.*

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி அன்னலட்சுமி சின்னராசா

[யா/ இணுவில் இந்துக் கல்லூரி ஓய்வு பெற்ற ஆசிரியை (பண்டிதர்)]

திதி: 10.11.2006 (வெள்ளிக்கிழமை)

குணத்தின் குன்றே
குடும்பத்தின் ஒளிமயமே
மணம் வீசும் மல்லிகையே
மாண்புள்ள தாயே
உன் நினைவாய் வாழுகின்றோம்.

கணவர், பிள்ளைகள்,
*கொழும்பு.* (55163) மருமக்கள், பேரர்

# மரண அறிவித்தல்கள்

## தம்பிராசா சாமுவேல்

**(இளைப்பாறிய சேவைக்கால ஆலோசகர் (ISA கிறிஸ்தவம்)**



அச்செழு வடக்கு, நீர்வேலியைச் சேர்ந்த தம்பிராசா சாமுவேல் நேற்று (12.11.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் திருச்செல்வராணியின் அன்புக் கணவரும் மதிச்செல்வி (ஆசிரியர், யாழ்.அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை), சத்தியநாதன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ப.அருள்குமார் (ஆசிரியர் - சோமஸ்கந்தக் கல்லூரி), ஷீலா (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிந்துஜா, ஷீனுஜா, மேபல், அலிஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது நல்லடக்கம் நேற்று (12.11.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புத்தூர் கிந்திட்டி மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**திருமதி திருச்செல்வராணி சாமுவேல் (மனைவி),**
**திருமதி மதிச்செல்வி அருட்குமார் (மகள்)**

## இராசரத்தினம் கருணாகரன் (மனேச்சர்-கண்ணன்)



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் (பார்சல்) நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் கருணாகரன் (கண்ணன்) 11.11.2006 சனிக்கிழமை சுவிஸில் அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மகனும் துஷ்யந்தியின் அன்புக் கணவரும் அஸ்வின், அபினாஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சுவிஸில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**பொ.திருஞானானந்தன்**
**இராஜ வீதி, நீர்வேலி.** (55170) (நீர்வேலி வடக்கு, நீர்வேலி)

# மணமகள் தேவை

கனடா குடியுரிமை உடைய 1974இல் பிறந்த உயரம் 5' 8'' கொண்ட நீசப்பட்ட 2இல் செவ்வாயும், கார்த்திகை 1ஆம் பாதமுடைய கிரகபாவ சங்கியை 52 1/4 உடைய சிவந்த அழகிய தோற்றமுடையவருக்கு பொருத்தமான மணமகளைத் தேடுகின்றோம்.

**ஆனந்தி திருமண சேவை**
*56, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தையா இரத்தினம்மா



204, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா இரத்தினம்மா நேற்று (12.11.2006) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*204, நாவலர் வீதி,* **தகவல்:**
*யாழ்ப்பாணம்.* (55172) **பிள்ளைகள்**

## திருமதி சிவப்ப ம் மகேஸ்வரி



காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் இல. 466, கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமாகவும் தற்போது இல.12 1/5, பம்பலப்பிட்டி பாசல் வீதியில் வசித்தவருமாகிய திருமதி சிவப்பிரகாசம் மகேஸ்வரி நேற்று (12.11.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கு.சிவப்பிரகாசத்தின் (உரிமையாளர், சிவப்பிரகாசம் அன் சன்ஸ், யாழ்ப்பாணம்), அன்பு மனைவியும் காலஞ்சென்ற க.ஆ.செல்லையாபிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சண்முகதாஸ், குகதாஸ் ஆகியோரின் அன்புத் தாயும் சுகந்தினி, விஜியலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியும் பூமிஜாவின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.11.2006) திங்கட்கிழமை ஜெயரட்ண மலர்ச்சாலையில் காலை 8 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் மு.ப. 10 மணியளவில் கனத்தை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**கு.சிவப்பிரகாசம் (கணவர்), பிள்ளைகள்.**
*தொ.பே. 2554148*

## திருமதி சின்னத்துரை மகேஸ்வரிதேவி



விநாயகர் வீதி, ஓடைஅல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சின்னத்துரை மகேஸ்வரிதேவி 09.11.2006 வியாழக்கிழமை தனது 80 ஆவது வயதில் 25 4/1, ஈ.எஸ். பெர்ணான்டோ மாவத்தை, கொழும்பில் காலமானார்.

அன்னார் முருகேசபிள்ளை-பொன்னம்மா தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற சின்னத்துரையின் (ஓய்வுபெற்ற அதிபர்) அன்பு மனைவியும் அழகக்கோன், பொன்னுக்கோன் (திருமலை), தேவக்கோன் (U.K), சீதங்கனி (Colombo) காலஞ்சென்ற சிவராசக்கோன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பவளராணி, வசந்தமலர் (Colombo), ரதி (Canada), ரவீந்திரக்கோன் (Canada), ராதாக்கோன் (Canada), இன்பம் (Canada) ஆகியோரின் அன்புத் தாயும் அழகரத்தினம் (ஆசிரியர்), ராசரத்தினம் (இ.போ.ச. வவுனியா), சிவஞானம் (Canada), கலைவாணி (Canada), அனுஷியா (Canada), தியாகரத்தினம் (Canada) ஆகியோரின் அன்பு மாமியும் மலரவன் (Soft. Eng - UK), மாலவன் (டாக்டர்), மஹிந்தா (UK), வினோதா, சுதர்சன் (Canada), ஆதித்தன் (Colombo), மீரா (Colombo) கனடா பேரப்பிள்ளைகளான ராதராம், ராதை, வைஷ்ணவன், வைஷாலினி, வைஷிகா, காயத்திரி, மயூரி, எழில், இனியவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.11.2006) திங்கட்கிழமை ஜெயரட்ண மலர்ச்சாலையில் காலை 8 மணியளவில் கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 2 மணிக்கு கல்ஹிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
திரு. திருமதி அழகரத்தினம், பவளராணி
(மகள்)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மகேஸ்வரி சிவஞானம்



கெருடாவில், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது பிறவுண் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி மகேஸ்வரி சிவஞானம் (ஓய்வு பெற்ற ஆசிரியை) (11.11.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவஞானம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)அவர்களின் அன்பு மனைவியும் சிவாஜி (தபால் அதிபர்), சியாமளா (ஆசிரியை - சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை), கௌசலா (கனடா), மஞ்சுளா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் வரதலட்சுமி, (கனடா), யோகலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் அமரர் கணேசலிங்கம், பாலசிங்கம், மீனாம்பிகை ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் சாவித்திரி, உதயசங்கரன் ஆகியோரின் அன்பு மச்சாளும் சகுந்தலா, பௌதிகவியல்துறை பேராசிரியர் கந்தசாமி(பீடாதிபதி பட்டப்பின் படிப்புகள் பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), தவக்குமார் (கனடா), பிரபாகரன் (கனடா) ஆகியோரின் மாமியும் கஜேந்திரன் (இறுதியாண்டு, பொறியியற் பீடம், பெரதேனியா) லாவணியா, உதயசங்கரி, சரண்யா, அஜனியா, சாரங்கன், பிரியங்கா,சாருஜன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2006) திங்கட்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் பிறவுண் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
*89, பிறவுண் வீதி,யாழ்ப்பாணம்.* **பேராசிரியர் க.கந்தசாமி**
*தொ.பே : 021 222 5369* *(மருமகன்).*

## மடுத்தீன் சிங்கராயர் (செல்லராசா - மண்டைதீவு)

மண்டைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட மடுத்தீன் சிங்கராயர் (செல்லராசா)10.11.2006 பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மடுத்தீன்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், அருளம்மாவின் அன்புக் கணவரும் அன்ரனி பெர்னான்டோ, அருளானந்தம், சறோசா, சூசைதாசன், யேசுதாசன், மரியதாசன், அல்போன்ஸ், றோகினி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற வரோணிக்கா, காலஞ்சென்ற அந்தோனிப்பர்னாந்து, பாக்கியநாதர் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), மரியசூசை(ஓய்வுபெற்ற ஆசிரியர்), திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் வசந்தி, மரியகொறற்றி, வில்சன், பத்மினி, வசந்தமாலை, கஸ்தூரி, ஜெனோவா, பேடினன்ட் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**T.P:0033134457205** **சி.அன்ரனி பெர்னான்டோ** *(மகன்).*

## அழகர்சாமி சரவணகுமார் (சரவணன்)

**(சரவணா மிக்சர் கடை உரிமையாளர்)**



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அழகர்சாமி சரவணகுமார் 11.11.2006 சனிக்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் அழகர்சாமி-ஐயம்மா தம்பதியரின் அன்பு மகனும் இராமராஜ் காலஞ்சென்ற லட்சுமிஅம்மா மற்றும் ராஜம்மாவின் மருமகனும் நாகஜெகதீஸ்வரியின் (ஜெயந்தி) அன்புக் கணவரும், சுருதிகா, தீப்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகேந்திரன், காலஞ்சென்ற சிவகுமார், சுகந்தி, நாகேஸ்வரி, உடன் பிறவாச் சகோதரி அனுஷா ஆகியோரின் சகோதரரும், சுந்தரி, இந்திரா, ஞானசேகர், ஐங்கரன், லோகநாயகன், சசிக்குமார், ரேணுகா ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற துளசிகா, பாதுஷன், தனுஷன் ஆகியோரின் சித்தப்பாவும் சுபோதினியின் பெரியப்பாவும் ஜோதி, சுவாதி, மனோஷிகன், வைஷ்ணவி, சங்கவி, சஞ்ஜீவன், கார்த்திகாயினி, சுவேதா, கவிநிஷா ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2006) திங்கட்கிழமை மு.ப.11 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*37, பிரப்பங்குளம் வீதி,* *தகவல்:*
*யாழ்ப்பாணம்.* **குடும்பத்தினர்.**

## பொன்னையா நாகலிங்கம்



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் தற்போது மயான வீதி, இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகர் (ஜெயலட்சுமி ஸ்ரோஸ், டாலை இரத்தினபுரி) பொன்னையா நாகலிங்கம் நேற்று (12.11.2006) ஞாயிற்றுக் கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பொன்னையா-பொன்னு தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-நாகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற ஆறுமுகம், அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் பரமானந்தன் (உத்தியோகத்தர் மூவிமொன்டோ நிறுவனம்) காலஞ்சென்ற சந்திரா, ராதா, ரட்ணா, நிர்மலா (இந்தியா), அனுஷியா (ஜேர்மனி), ரவிகரன் (லண்டன்), பிரபாகரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பத்மநாதன் (இளைப்பாறிய வருமான வரி உத்தியோகத்தர்) யோகலிங்கம், சிவபாதசுந்தரம் (இளைப்பாறிய உத்தியோகத்தர், யாழ்.மாநகர சபை) காலஞ்சென்ற ரவீந்திரன், தில்லைநடராசா (ஜேர்மனி), சூரியகுமாரி, கலாதேவி (லண்டன்), ராஜேந்திரி (லண்டன்) ஆகியோரின அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.11.2006 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12 மணிக்கு தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
*மயான வீதி, இணுவில் தெற்கு,* **நா.பரமேஸ்வரி** (மனைவி)
*இணுவில்.* (55171) **நா.பரமானந்தன்** (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ-9 பாதையைத் திறப்பதற்கு அரசுக்கு விருப்பமில்லையெனில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்கவில்லை என்று சொல்லலாமே..!

## தமது இறுதிப்பேட்டியில் சிங்கள ரி.வியில் அரசின் பொய்மைகளைச் சாடினார் ரவிராஜ்

ஏ-9 பாதை திறக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆகிய நாம் ஆர்ப்பாட்டங்களை நடத்திவருகிறோம். இதனிடையே ஒக்ரோபர் 16 ஆம் நாள் வடக்கு - கிழக்கைப் பிரிக்க வேண்டும் என்று அதி உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இருப்பினும் அந்தத் தீர்ப்பில் எங்களுக்குப் பிரச்சினை இல்லை. எமக்கு அரசியல் பிரச்சினை உள்ளது. வடக்கு - கிழக்கு மக்கள் இணைந்தே வாழ்கின்றனர். வடக்கு - கிழக்கு இணைந்தே இருக்க வேண்டும் என்பதே அந்த மக்களின் அபிலாசையாகும். அந்த மக்களினது அடிப்படை மனித உரிமையும் அதுதான்.

முன்னைய காலத்தில் இலங்கையில் சிங்கள மற்றும் தமிழ் அரசுகள் இருந்தன. எங்கள் மக்களுக்கு இது புதியது அல்ல. வடக்கு - கிழக்குப் பிரதேசங்கள் முன்னைய காலத்திலேயே தமிழ்ப் பகுதிகளாக இருக்கின்றன. அதற்காக நாம் இந்த நாட்டைப் பிரிக்க வேண்டும் என்று விரும்பவில்லை. வடக்கு - கிழக்கு ஒரே அலகாகக் கருதப்பட வேண்டும் என்று நாம் நம்புகிறோம். இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படும் நிலையில் அதுதான் அடிப்படையானதாக இருக்கும்.

இந்த நாடு பிரிக்கப்படக்கூடாது என்று ஏன் நீங்கள் சொல்லுகிறீர்கள்? ஏனெனில் இந்த நாடு பிரிக்கப்படாமல் இருக்கும்போது மக்களின் உணர்வுகள் வலுவானதாக இருக்கும் எனக் கருதுகிறீர்கள். அதேபோல் வடக்கு - கிழக்கு இணைந்து இருப்பதன் மூலம் தமிழர்கள் தங்களுக்கு வலுவானதாகக் கருதுகின்றனர். தங்களது அபிலாசைகளை வெளிப்படுத்தும் சந்தர்ப்பமாக அது இருக்கும். இரு மாகாணங்களும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களாகும்.

**ஒற்றையாட்சிக் கோட்பாடு நீண்டகாலமாக ஏற்கப்படாதது**

அதேநேரத்தில் ஒற்றையாட்சி அரசாங்கக் கோட்பாடு என்பது நீண்டகாலமாக ஏற்கப்படாதது. அது பழைய நடைமுறை. அது இன்று செல்லுபடியாகாதது. நாம் 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தோம். எந்த ஒரு தமிழர் தலைவரும் தனியரசையோ கூட்டரசையோ அப்போது கோரவில்லை. ஆனால், ஏன் தற்போதைய நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டோம்?

பொன்னம்பலம் அவர்கள் 50 இற்கு 50 விழுக்காடு கோரிக்கையை முன்வைத்தார் என்றால் அதில் காரணம் உள்ளது.

1947 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்தபோது பாகிஸ்தான் தனிநாடாக வேண்டும் என்று மொகமெட் அலி ஜின்னா கோரினார். நாமோ 50 இற்கு 50 விழுக்காடு மற்றும் கூட்டரசுக் கோரிக்கையை முன்வைத்தோம். தற்போது தனியரசுக்காகத்

பத்தில் தாய்மார்கள் பொதுவாக பாதிக்கப்பட்ட அல்லது இளையவர்கள் மீது அனுதாபம் கொண்டிருப்பவர்களாக இருப்பார்கள். அந்தக் குழந்தைக்கு உணவு உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்போம். ஆனால் ஏ-9 மூடப்பட்டதால் அரசாங்கம் என்ன செய்தது?

அரசாங்கத்தினால் பாதையைத் திறக்க முடியவில்லை என்று கூறப்பட்டால் அந்த மக்கள் இந்த நாட்டின் மக்கள் இல்லை என்கிற தோற்றம் தானே வெளிப்படும். நாங்கள் கப்பலில் உணவுப் பொருள்களைத

லிக் கொள்கிறேன்.... அம்பாந்தோட்டைக்குச் செல்லும் பிரதான பாதையை மூடிவிட்டு கொழும்பிலிருந்து கப்பல் மூலம் பொருள்களை எடுத்துச் செல்லுங்களேன்...

அம்பந்தோட்டையில் பயங்கரவாதப் பிரச்சனை என்கிறீர்களே... ஏன் எப்போதுமே பயங்கரவாதம் தொடர்பிலான விவகாரத்தையே பேசுகிறீர்கள்?

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் 1.1. சரத்தில் தெளிவாக ஏ-9 பாதை திறக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதனை அரசாங்கம் விரும்பவில்லை எனில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்கவில்லை என்று

தனிப்பட்ட நபர்கள் பிரச்சினையும் உள்ளது... என்னுடைய நண்பர் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க, ஜாதிக ஹெல உறுமய ஏன் இராணுவ தளபதி சரத் பொன்சேகா என....

பௌத்தர்கள் தாங்கள் மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்கின்றனர். இருந்தபோதும் பௌத்த மதத்தைப் பின்பற்றும் பௌத்த் பிக்குகள் யாழ்ப்பாண மக்களுக்கான உணவுப் பொருள்களை ஏ-9 பாதையூடாக எடுத்துச் செல்ல எதிர்க்கின்றனர்.

ஏ-9 விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை தலையிடுவது என்பது இந்த நாட்டின் இறைமையை மீறுவதாகும் என்று விமல் வீரவன்ச கூறுகின்றார்... இறைமையைப் பற்றிப் பேச அவருக்கு என்ன உரிமை இருக்கிறது? 1971 ஆம் ஆண்டு ஜனநாயக பூர்வமாகத் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்துக்கு எதிராக யார் ஆயுதம் தூக்கி



***மாமனிதர் ரவிராஜ், கொலைஞர்களால் சுட்டுப்படுகொலை செய்யப்படுவதற்கு சுமார் அரை மணித்தியாலத்துக்கு முன்னரே சிங்களத் தொலைக்காட்சிக்கு அளித்த தனது செவ்வியைப் பூர்த்திசெய்திருந்தார்.***

***கடந்த வெள்ளிக்கிழமை காலை, கொழும்பில் இருந்து ஒளிபரப்பாகும் "தெரண" தொலைக்காட்சிக்கு அவர் ஒருமணிநேரச் செவ்வியை வழங்கி இருந்தார்.***

***காலை 7மணி தொடக்கம் 8மணிவரை இடம்பெற்ற செவ்வியை முடித்துக்கொண்டு வீடு திரும்பிய பின்னர், அங்கிருந்து தமது நீதிமன்றத்துக்குச் சென்ற வேளையிலேயே சுமார் 8.30 மணியளவில் அவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.***

***மாமனிதர் ரவிராஜ் மும்மொழிகளிலும் பேசுவதில் மட்டுமன்றி விவாதம் செய்வதிலும் வல்லவர்.***

***கடந்த வியாழக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐ.நா.அலுவலகத்தின் முன்னர் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது வெகுஆக்ரோஷமாக மூன்று மொழிகளிலும் கோஷமிட்டவர் அவர்.***

***"தெரண" தொலைக்காட்சிக்கு அவர் வழங்கிய செவ்வியின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தமை தெரிந்ததே.***

***இங்கு அவரது செவ்வியை முழுமையாகத் தருகிறோம்.***

தருகிறோம் எனில் எல்லாம் எதனை வெளிப்படுத்துகிறது?

**அரசாங்கத்தின் கீழ்த்தரமான பொய்**

ஏ-9 பாதை மூடப்பட்டமைக்கு, விடுதலைப் புலிகள் வரி அறவிடுகிறார்கள் என்று அரசாங்கம் கூறுகிறது. என்னே ஒரு பொய்? ஏ-9 பாதை திறப்பு என்பது 2002 ஆம் ஆண்டு நடந்தது. அதுவரை தமிழீழ விடுதலைப் புலிகள் எப்படி வாழ்ந்து கொண்டிருந்தனர்? ஏ-9 திறப்புக்கு முன்னர் அவர்கள் நிதி பெறவில்லையா? அவர்களிடம் போதுமான உணவும் இதர வசதிகளும் இருந்தது இல்லையா? அரசாங்கத்தின் கீழ்த்தரமான பொய் இது.

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுத் தான் திரும்பினேன். மக்களிடமிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் வரி விதிக்கின்றனர் என்பதை ஏற்றுக் கொள்கிறேன்.

ஆனால், 1995 ஆம் ஆண்டு முதல்

அரசாங்கம் ஏன் சொல்லவில்லை?

யுத்த நிறுத்த ஒப்பந்தம் முடிந்து போனால் யுத்தம் தொடங்கிவிடும். அப்பகுதி மக்களுக்கு அதனால் எதுவும் இல்லை. ஏ-9 பாதை மூடப்பட்டமையால் அப்பாவி மக்கள் சொல்லமுடியாத துயரங்களுக்கு ஆளாகியுள்ளனர். அப்பகுதி விலங்குகள் கூட பட்டினியால் சாகின்றன.

அங்கே உள்ள இராணுவ முகாமிலிருந்து கொழும்புக்கு விசா வாங்கி வருகிறோம் என்பதை நீங்கள் அறிவீர்களா?

ஏ-9 பாதையைப் புலிகள் மூடியிருப்பதாக சொல்வது என்னே ஒரு முட்டாள் தனம்! ஏன் நான் கிளிநொச்சிக்கும் பளைக்கும் அண்மையில்கூட சென்று வந்தேனே... எறிகணைத் தாக்குதலிலிருந்து தப்பியும் வந்திருக்கிறேன்.

யார் தாக்கியது எனக் கேட்கிறீர்கள்? வெளிப்படையாக....யுத்த காலத்தில் எந்தப் பக்கத்திலிருந்து தாக்குதல் நடத்தப்

யது? 1988-89 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மண் எண்ணெய் விளக்கைக் கூட அவர்கள் எமக்கு அனுமதிக்கவில்லை. ஆகையால் அவர்களால் இன்று எப்படி இறைமையைப் பற்றிப் பேச முடிகிறது?

**இந்தியாவின் கிராமப் பஞ்சாயத்து முறையா....?**

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இந்திய பஞ்சாயத்து முறை பற்றிப் பேசப்படுகிறது. இந்தியப் பஞ்சாயத்து முறை என்பது ஒரு கிராம நிர்வாக அமைப்பு. உயர்நிலையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட பின்னர்... கிராமங்களுக்கு- சுயாட்சி அளிப்பது போன்றதானது. இலங்கையில் அது நடைமுறைப்பட்டிருப்பதாக நான் கேள்விப்படவில்லை.

சிங்களவர்களும் தமிழர்களும் இராணுவப் போராட்டததை - இரத்தக் களரியை - இந்த நாட்டில் பார்க்க விரும்பவில்லை. அமைதியாகவே வாழ விரும்புகின்றனர். ஆழிப்பேரலையின் போது முல்லைத்தீவில் தமிழர்களுக்கு சிங்களவர் உதவினர். அவர்கள் யுத்தத்தை விரும்பவில்லை. நான் பேச்சுகளை ஆதரிக்கிறேன். இதை நான் மட்டுமே சொல்லவில்லை. கலிங்கத்துப் போருக்குப் பின்னர் அசோக சக்கரவர்த்தி கூறியதுதான் இதற்கு முதல் உதாரணம்.

பட்டினியால் வாடும் மக்களுக்கு முதலில் உணவுப் பொருள்களை அனுப்பி நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும். அதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது ஆதரவை அளிக்கும்.

## இந்தியாவின் கிராமப் பஞ்சாயத்து முறை குறித்து உண்மையான விவரம் தெரியுமா?

தமிழீழ விடுதலைப் புலிகள் போராடுகின்றனர். இருந்தபோதும் அரசியல்வாதிகளாகிய நாங்கள் ஐக்கிய நாடாக இருக்க வேண்டும் என்று இப்போதும் நம்புகிறோம். யார் இந்த நிலைக்குப் பொறுப்பு? சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே நாங்கள் பாரபட்சமாக நடத்தப்பட்டோம்.

சோல்பரி ஆணையத்தின் சரத்துகள் முதலில் நீக்கப்பட்டன. அவை சிறுபான்மையினருக்குப் பாதுகாப்புக்கானது.

சிங்களம் மட்டுமே என்ற சட்டம் கொண்டு வரப்பட்டது.

அப்படியானால் எம்மை இந்த நிலைக்குத் தள்ளியது யார்?

**22 மாநிலங்கள் உள்ளபோதும் இந்தியா ஐக்கியமான நாடு**

இந்தியா சுதந்திரமடைந்தது 1947. இப்போது 22 மாநிலங்கள் உள்ளன. இருந்தபோதும் ஐக்கிய நாடாகத்தானே இருக்கிறது. ஏனெனில் அங்கே நிர்வாக அமைப்பு அப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது.

கூட்டரசு முறை என்பது நாட்டைப் பிளவு படுத்தும் என்று சிலர் கருதுகின்றனர். நாம் சிறந்த உதாரணமாக இந்தியாவைக் கொள்ளலாம்.

1965 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் தனியரசு அதிகாரங்கள் கோரப்பட்டன. இப்போது தமிழ்நாட்டுத் தமிழர்களைக் கேட்டால் நாங்கள் இந்தியர்கள் என்கின்றனர்.

யாழ்ப்பாணத்தின் ஏ-9 பாதை மூடப்பட்டுள்ளமையால் மக்கள் பட்டினிச்சாவில் உள்ளனர்.

நாம் ஒரே குடும்பத்தவர். ஒரு குடும்

யாழ். மேயராக இருந்தபோது கப்பல்களில் உணவுப் பொருள்களை அனுப்பி வைத்தோம். பெற்றோலின் விலை அப்போது 1,000 ரூபாயாக இருந்தது. அப்போது வரி யாருக்குப் போனது?

நான் ஒன்றை உறுதியாகச் சொல்கிறேன். ஏழை மக்களுக்கு இலவசமாக பிரதேச செயலகங்களினூடே விநியோகிக்கப்படுகின்ற அரசாங்கம் தருகின்ற அத்தியாவசியப் பொருள்கள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் ஒருபோதும் வரி விதித்தது இல்லை. மேலும் எந்த மக்கள் விடுதலைப் புலிகளுக்கு வரி செலுத்துகின்றனர்? மகிந்த ராஜபக்ஷவா? ஹெகலிய ரம்புக்வெலவா? ஏன் இந்த ரவிராஜ் கூட இல்லை... அவர்கள் பிரதேசத்தில் வாழும் மக்கள்தானே..

ஏ-9 பாதை திறக்கப்பட்ட போது தமிழீழ விடுதலைப் புலிகளின் வரி விதிப்புடன் கூட பெற்றோலின் விலை 10 ரூபாய் வித்தியாசம்தான் இருந்தது.

**பூநகரிப் பாதை போக்குவத்திற்கு ஒவ்வாதது**

பூநகரிப் பாதையினூடாகக் கிளிநொச்சி செல்வது என்பது அதிக தொலைவும் போக்குவரத்திற்கு ஒவ்வாத வீதிகளையும் கொண்டது. கடலிலிருந்து 2 கிலோ மீற்றர் தொலைவில்தான் அந்தப் பாதை உள்ளது. இருந்தபோதும் அந்தப் பாதையைப் பார்வையிடச் சென்றவர்களுக்கு என்ன நடந்தது? கண்காணிப்புக் குழுத் தலைவர் மயிரிழையில் உயிர்தப்பிப் பதுங்கு குழிக்குள் பதுங்க வேண்டியதாயிற்று பூநகரிப் பாதையினூடாக சென்றால் [illegible]?

மகிந்த ராஜபக்சவுக்கு ஒன்றைச் சொல்

படுகிறது என்பதை பார்க்க முடியாது. யாழ்ப்பாணத்தில் நான் இருந்தபோது பதில் தாக்குதல் என்ற பெயரில் 50 முதல் 60 எறிகணைகளை இராணுவம் அடிக்கும்... தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து ஒன்றிரண்டு எறிகணைகள் வந்து விழும்.

ஏ-9 பாதை திறக்கப்பட வேண்டும் என சர்வதேச பார்வையாளர்கள் தலையீட்டுடன் விடுதலைப் புலிகள் கருதுகின்றனர்.

பொதுமக்களைக் கப்பலில் ஏற்றிச் சென்றபோது விடுதலைப் புலிகள் தாக்கியதாகச் சொல்கிறீர்களே... ஏன் பொதுமக்களைக் கடலினூடே கப்பலில் அரசாங்கம் அழைத்துச் செல்ல வேண்டும்?

ஒரே கப்பலில் 1,000 பேர் பயணித்தனரே..யார் அவர்கள்?

300 பேர்தான் பொதுமக்கள். மற்ற அனைவருமே பாதுகாப்புத் தரப்பினரே. பாதுகாப்புத் தரப்பினர் தங்களது உற்றார், உறவினர்களைப் பார்க்கச் செல்லக் கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால், இராணுவத்தினரைக் கொண்டு செல்வதற்காக மக்களையும் ஏற்றிக்கொண்டு அரசாங்கம் சென்றது. ஏ-9 பாதையைத் திறந்திருந்தால் இந்தப் பிரச்சினையே இல்லையே.

1995 ஆம் ஆண்டு ஏ-9 பாதைத் திறப்புக்காக "ஜயசிக்குறு" நடவடிக்கையை மேற்கொண்ட அரசாங்கத்தால் ஆயிரக் கணக்கான இளைஞர்கள் கொல்லப்பட்டனர். இப்போது அரசாங்கம் ஏ-9 பாதையை மூடி வைத்துள்ளது.

**இறைமை குறித்து ஜே.வி.பி. எப்படிப் பேசமுடிகிறது**

இந்தப் பிரச்சினைக்கான தீர்வு எனில்,

## யாழ். தொழில்நுட்பக்கல்லூரி இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ.13

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் இவ்வாண்டுக்கான இறுதிப் பொதுப் பரீட்சை அடுத்தமாத நடுப்பகுதியில் நடைபெறும் என கல்லூரி அதிபர் என்.யோகராஜன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பரீட்சை விண்ணப்ப முடிவு திகதி ஏற்கனவே முடிந்துவிட்டது. ஆயினும், இதுவரை விண்ணப்பிக்காத மாணவர்கள் கல்லூரியின் பதிவாளரைச் சந்தித்துப் பதிவுகளை உடன் மேற்கொள்ளலாம்.

தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான 2005 ஆம் ஆண்டுக்குரிய விசேட பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் அனைவரும் இப் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனவே, மாணவர்கள் பதிவாளரை உடனடியாகத் தொடர்புகொண்டு விண்ணப்பங்களைப் பெற்று, மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையில் பரீட்சைக் கட்டணத்தை செலுத்திப் பதிவு செய்யலாம் - என்றார்

(202-79)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ministry of Healthcare, Nutrition and Uva Wellassa Development

## General Hospital (Teaching) Jaffna

## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

### Registration of Suppliers and Servicers for year - 2007

### 2007 ஆம் ஆண்டுக்கான பொருள்கள் வழங்குநர், சேவைகள் வழங்குநர் ஆகியோரைப் பதிவு செய்தல்

Applications are invited from. manufacturers, suppliers, sole Agents, Registered Co-operative societies, Government Institutions, including statutory Boards, Registered Business Organizations, individuals, who wish to register themselves with this institution for the supply of items and services listed below for the year 2007

All applications should be sent under registered cover addressed to Director, Teaching Hospital, Jaffna with the top left hand corner of the envelop marked "Registration of suppliers and services - 2007." To reach undersigned on or before 15th, December 2006 at 10.a .m.

**Conditions**

A.Non Refundable Registration fee of Rs.100.00 should. be paid for each item and separate application to be submitted according to the supply / service. Money should be paid to this office and submit the receipt with the application. (Cheques and Money orders will not be accepted.)

Applications can be made for one or more items coming below No *(A)* Supplies, No.(B) Services and No.(C) Vehicles by one applicant lone Institute. But separate applications should be made for each item in the list. Application forms are available in this office.

Suppliers, services providers should be able to give one month credit when requested for quotation is made if registered suppliers, services providers should quote the prize for requir[illegible]plies same. Director reserves the right to call quotation from external source also. Failure to quote an[illegible] effecting supplies and services in keeping with the standards will make the name of supplies to be deleted from. the list.

யாழ்.போதனா வைத்தியசாலையில் 2007 ஆம் ஆண்டில் பொருள்கள் வழங்குநர்களையும் சேவை வழங்குநர்களையும் பதிவு செய்வதற்கு பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர்கள், விநியோகத்தர்கள், விற்பனை முகவர்கள், அரச நிறுவனங்கள், அரசசபைகள், பதிவு செய்யப்பட்ட வியாபார ஸ்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் என்பவற்றிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை பணிப்பாளர் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 15.12.2006 அன்று முற்பகல் 10 மணிக்கு அல்லது அதற்கு முன்பதாக அனுப்பி வைக்கும்படி கோரப்படுகின்றனர்.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும்

குறியீடு (A) பொருள்கள் வழங்குதல்,

குறியீடு (B) சேவை வழங்குதல்,

குறியீடு (C) வாகன சுத்திகரிப்பு, வாகனத்திருத்தம் என்பவற்றின் கீழ்வரும் ஒவ்வொரு வகையானவற்றுக்கும் தனித்தனியாக ஒவ்வொன்றுக்கும் 100 ரூபா வீதம் எமது காரியாலயத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று எம்மால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து விண்ணப்பித்தல் வேண்டும்.

பொருள்கள் வழங்குநர்களும், சேவைகள் வழங்குநர்களும் ஒரு மாத கால கடன் அடிப்படையில் பொருள்களையும் சேவைகளையும் வழங்குதல் வேண்டும்.

கூறுவிலை கூறும் போது பதிவு செய்யப்பட்ட விநியோகத்தர்களும் சேவை வழங்குநர்களும் தமது கூறுவிலைகளை கண்டிப்பாகக் குறிப்பிடவேண்டும். பணிப்பாளர் வெளியாரிடமிருந்தும் கூறுவிலை கூறுவதற்கு உரிமை கொண்டிருப்பார் என்பதும் அறிவிக்கப்படுகிறது.

**(A) SUPPLIES**

01.Stationery items with Local and imported computer stationery, printed computer stationery, photocopy papers, C.R.Books, ball point pens, Pencils envelops items, Carbon papers, white papers Staplers, correcting fluids, stencils, diskettes magnetic tapes, computer materials, including printer ribbons and papers, diskettes, toner, cartridges, Glue cubes and liquid glue
02 Furniture (Wooden)
03 Furniture (Steel)
04 Mats/Brooms and Ekel Brooms
05 Coir Mattress and rubber mixed coir mattress (Rubberized)
06 All Type linen items, Mackintosh, and clothing items, Elastic and Nylon cords
07 All Aluminum items and Household equipment
08 Ceramics Glassware Items.
09 Paint, Varnish and floor polish, surgical spirit and Nail items.
1 0 Washing soda, Cleaning Detergents, Vim, Harpic , Saving blades and Matches
11 Building Materials
12 Spare parts of the all type of Vehicles
13 Plumping Items, P. V. C. Pipe & etc
14 All type of Batteries
15 Leather and Leather products ,
16 Hardware items, Pad lock, Galvanized .Bucket and Nails etc
17 Electrical Appliances Air Conditioners, Refrigerators, Ceiling fans & Pedestal Fans, Bulbs etc
18 All type of Rexene and polythene items.
19 Drugs and Milk food items
20 Rubber-stamps items.
21 Computers and related accessories.
22 Dressing.
23 Surgical Consumables
24 Surgical Instruments.
25 Surgical equipments
26 Dental Consumables
27 Laboratory Equipment.
28 Carpentry Items ( All type of wood, Planks, etc

**(B) Services.**

01.Repairs of Steel Furniture.
02. Repairs of Wooden Furniture.
03. Repairs of Electrical appliances (Air Conditioners, Refrigerators, & Deep Freezers. Repairs and services of Typewriters, Calculators, Roneo machines, Computers and printers
04. Printing ( All Type of forms )
05. Repairs of surgical appliances x-ray machine and all the Hospital, equipment.
06. Rewinding of Electrical motors, Fans, & etc.
07. All kinds of Mechanical equipment services, Maintenance and repair.
08. Gas / Oxygen equipment services and repair. (Gas Burners and Gas cookers.)
09. Water Pump Sewerage Machine repairs and maintenance.
10. Repairs of Water supply and Toilet pipes.
11. Disposal of Hospital Carbage
12. Sewing works.
13 Maintenance of official Identity card and rubber stamp.
14 Repairs of Buildings.

**(C) VEHICLES.**

01. Repairs" Electrical Works and cushions works of the all type of the Vehicles 02 Services of all type of Vehicles

**Dr. S.Raviraj,**
**Actg. Director,**
**Teaching Hospital**
**Jaffna**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## விண்ணப்பிக்கவும்

செய்திப் பத்திரிகையில் உதவி ஆசிரியராகவும், அலுவலகச் செய்தியாளராகவும் பணியாற்றிய ஐந்து வருடங்களுக்குக் குறையாத முன் அனுபவம் உள்ளவர்கள் 20.11.2006ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

முழுமையான சுய விவரங்களுடன், சிபார்சு செய்யக்கூடிய இருவரின் நற்சான்றுப் பத்திரங்கள், கிராம சேவகரின் வதிவிட அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றை இணைத்து அனுப்புதல் அவசியம்.

யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும், ஆங்கில அறிவுடையோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

வயதெல்லை - 25 முதல் 45 வரை.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விளம்பர இலக்கம்: 121
உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில் 20 வருடங்களாகச் சங்கீத ஆசிரியராகவும், உப அதிபராகவும் அளப்பரிய சேவையாற்றி 07.11.2006 அன்று ஓய்வு பெற்ற

திருமதி
**சரஸ்வதிப்பிள்ளை தர்மலிங்கம்**
(உப அதிபர், ஆசிரியர் சேவை வகுப்பு -I, நுண்கலைப் பட்டதாரி) அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சேவை விவரம்:-
18.05.1977 - 04.07.1979 கிளி/முருகானந்தா ம.வி.
05.07.1979 - 31.12.1981 யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை.
01.01.1982 - 01.06.1982 திரு/கன்னியர் அ.த.க.பாடசாலை.
02.06.1982 - 30.04.1986 கிளி/வட்டக்கச்சி ம.வி
01.05.1986 - 06.11.2006 யா/மீசாலை விக்னேஸ்வரா ம.வி

யா/மீசாலை விக்கினேஸ்வரா ம.வி,
அதிபர், ஆசிரியர்கள்,
கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள்.

(55153)

## இந்த 31ஆம் நிறைவு நாளில் விழி சிந்தி அஞ்சலிக்கிறோம்

ஊருக்கு உறவுக்கு
08 . 01 . 1930



விண்ணுக்கு நிறைவுக்கு
14 . 10 . 2006

**திருமதி இராசம்மா கணபதிப்பிள்ளை**

எத்தனை உறவுகள் வந்திட்டாலும்
எத்தனை தாய்மாரைச் சந்தித்தாலும்
இத்தரை மீதொரு தாய்க்கு நிகர்
இருக்குமா இல்லவே இல்லையம்மா
தாய்மனம் தாய்மனந்தான் உலகில்
தங்கத்தின் நிகர் தாயாம் அதனாலெங்கள்
வாய்தினந் தினம் அம்மா அம்மாவென்று
விடியலாம் உங்களை அழைக்குதம்மா.

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

மக்கள், மருமக்கள்,
பேரமக்கள்.

(55152)

## கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட

அமரர் **நடராஜா ரவிராஜ்**
(யாழ்.மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்)

10.11.2006 ஆம் திகதி யாரும் எதிர்பாராத வேளை கொழும்பில் அகால மரணமானார். அன்னாரின் மறைவிற்கு எமது மன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்துடன், துயருற்றிருக்கும் தமிழ் மக்களும், நாமும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!ஓம் சாந்தி!!!

இல.13, தனங்களப்பு வீதி,
சாவகச்சேரி.

சாவகச்சேரி
கைத்தொழில் வணிகர் மன்றம்.

(C/51315)

## வீட்டுத்தோட்டங்களுக்கு ஊக்குவிப்பு; இலவச விதைகள் வழங்கப்படும்

யாழ்ப்பாணம்,நவ.13

குடாநாட்டில் வீட்டுத்தோட்டங்களை ஊக்குவிக்கும் முகமாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை தனது சங்க உறுப்பினர்களுக்கு இலவசமாக விதைகளை வழங்கவுள்ளது. சங்க உறுப்பினர்கள் தமது பிரிவுக் காரியாலயத்துடன் தொடர்புகொண்டு விதைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று கிளையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் செயற்படுத்தும் வீட்டுத் தோட்டம் சிறப்புற முன்னெடுக்கப்படுகின்றதா என்பதைக் கிளையும், அந்தந்தப் பிரிவும் மேற்பார்வை செய்யும் எனவும் அவர் தெரிவித்தார். (202)

## குடிதண்ணீர் பெற குழாய்க் கிணறுகள்

சாவகச்சேரி,நவ.13

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் மூன்று குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பொதுமக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினை அதிகமாகவுள்ள பகுதியல் இக்கிணறுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பகுதியில் பல இடங்களில் குடிதண்ணீர் நிலைகள் உவர் நீராக மாற்றமடைந்து காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (203-31)

# விமான சேவைகளை நிறுத்தி ஏ-9 பாதையைத் திறக்கச் செய்க

## இந்திய அரசைக் கேட்கிறார் திருமாவளவன்

கொழும்பு, நவ.13

ஏ-9 பாதை திறக்கும் வரை இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையேயான அனைத்து விமானப்போக்குவரத்துகளையும் நிறுத்த இந்திய அரசு முன்வர வேண்டும்.

இவ்வாறு விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன் வேண்டுகேள் விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணத்தில் ஆறு லட்சம் ஈழத்தமிழர்கள் பட்டினிக்கு உள்ளாகியுள்ளனர்.

இவ்வாறான நிலைமையை ஏற்படுத்தும் வகையில் மூடப்பட்டிருக்கும் ஏ-9 பாதையைத் திறக்கும் வரை இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையேயான அனைத்து விமானப் போக்குவரத்துகளையும் நிறுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

செஞ்சோலையில் ஆதரவற்ற சிறுவர்களை ஈவிரக்கமற்ற முறையில் குண்டு வீசிப் படுகொலை செய்த இன வெறிக்கும்பல் அந்தக் குருதி காய்வதற்கு முன்னர் மட்டக்களப்பு, வாகரை கதிரவெளிக் கிராமத்தில் அகதிகளைக் கொன்று குவித்துள்ளது.

பொதுமக்கள் மீது குண்டு வீசுவது அதிலும் அகதிகளைக் கொல்வது அப்பட்டமான - கேவலமான மனித உரிமை மீறலாகும்.

நோர்வே நாட்டைச் சேர்ந்த கண்காணிப்புக் குழுத் தலைவரைக் கூட குறிவைத்துக் குண்டு வீசியுள்ளனர். மயிரிழையில் அவர் உயிர் தப்பியுள்ளார்.

இந்நிலையில் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ இந்தியாவுக்கு வரப்போகிறார்.

ஆறுலட்சம் ஈழத்தமிழர்களைப் பட்டினிக் கொடுமைக்கு உள்ளாக்கும் வகையில் ஏ-9 நெடுஞ்சாலையை மூடியிருப்பது புலிகளைப் பணிய வைப்பதற்கான போர் உத்தியாக ஜனாதிபதி ராஜபக்ஷ கையாள்வது மன்னிக்க முடியாத கொடுமையாகும்.- என்றுள்ளது. (203)

## இரு இளைஞர்களைக் காணவில்லையென்று யாழ். மனித உரிமை அலுவலகத்தில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,நவ.13

இரு இளைஞர்களைக் காணவில்லை என மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் அவர்களது உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுதுமலை தெற்கு, சாவற்கட்டைச் சேர்ந்த தினேஷ் திலக்குமார் (வயது 25) என்பவரைக் கடந்த 02.10.2006 ஆம் திகதியில் இருந்து காணவில்லை என்று உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

அத்துடன் கடந்த வெள்ளிக்கிழமையில் இருந்து உடுவில் வீதி, மானிப்பாயைச் சேர்ந்தவரான கிருஷ்ணபிள்ளை சுதாகரன் (வயது 28) என்பவரையும் காணவில்லை என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (203-79)

## புராண படனம்

வழக்கம்பரை முத்து மாரியம்மன் ஆலயத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் காசி காண்ட புராணப் படிப்பு இடம்பெறவுள்ளது. தினமும் பி.ப. 2.30 மணிமுதல் 4 மணி வரை புராணப் படிப்பு இடம்பெறும். கார்த்திகைத்திங்கள் தோறும் சிவலிங்கப் பெருமானுக்கு வில்வ அர்ச்சனை இடம்பெறும். (202-28)

# மிருசுவில் உப தபாலகத்தை இடம்மாற்றம் செய்யவேண்டாம்

## கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.

மிருசுவில் உப தபால் அலுவலகத்தை தற்போது இயங்கும் இடத்தில் இருந்து வேறு இடத்திற்கு மாற்ற வேண்டாம் என்று மிருசுவில் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 31 ஆம் திகதி 'உதயனில்' வெளியான 'மிருசுவில் உப அஞ்சலக இடமாற்றத்தால் வயோதிபர்கள் உட்பட மக்கள் பாதிப்பு' என்ற தலைப்பில் வெளியான செய்தி தொடர்பாக அவர்கள் அனுப்பி வைத்துள்ள தமது நிலைப்பாடு குறித்த கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த விளக்கக் கடித்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மிருசுவில் உப அஞ்சலகம் மிருசுவில் விநியோகப் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கே உரியதாகும். பிற ஊர்களுக்கோ பகுதிகளுக்கோ இது உரியதல்ல.

இதேவேளை - பாலாவி மிருசுவில் விநியோகப் பகுதிகளுக்கு உட்பட்டதல்ல.அங்கிருப்போர் எவரும் மிருசுவிலில் உதவிப் பணம் எடுப்பதில்லை.

அத்துடன் உசன் பகுதியில் இருந்து மக்கள் முற்றாக வெளியேறியுள்ளனர். தவசிக்குளம் பகுதியில் 10 வீதமான மக்களே உள்ளனர். அவர்களிலும் சிலரே உதவிப் பணம் பெறுகின்றனர்.

இவற்றை விட முக்கியமான விடயம் மிருசுவில் பகுதியில் பாதுகாப்பான இடம் மிருசுவில் வடக்குப் பகுதி மட்டுமேயாகும். ஏனைய இடங்களில் பாதுகாப்பு இல்லை.

பிரதேச செயலகத்தின் புள்ளி விவரங்களின் படி மிருசுவில் உப அஞ்சல் அலுவலகத்தில் உதவிப் பணம் பெறும் 190 பேரில் 120 வரையானோர் மிருசுவில் வடக்கிலேயே உள்ளனர்.

தற்போது அஞ்சலகம் இயங்கும் இடத்திற்கும் நிரந்தரக் கட்டடம் உள்ள இடத்திற்குமான தூரம் ஒன்றரைக் கிலோமீற்றர் மட்டுமே.

மிருசுவில் உப அஞ்சலகம் பாதுகாப்புக் காரணங்களுக்காகக் கொடிகாமத்திற்கு கொண்டு செல்லப்பட்ட போதும் மக்களின் நலன் கருதி மீண்டும் மிருசுவில் வடக்குக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

மீண்டும் சொந்த இடத்திற்கு மாற்றப்பட்டால் சுமார் 400 குடும்பங்கள், தபால் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள 8 கிலோ மீற்றர் தூரம் அலைய வேண்டி நேரும்.- என்றுள்ளது. (203)

## பார்வை குறைந்தோருக்கு இலவச மூக்குக் கண்ணாடி

தென்மராட்சி, நவ.13

கல்வயல் பிரிவைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பார்வையில் குறைபாடுள்ளவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயத்தில் கடந்த வாரமளவில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் நடத்தப்பட்ட இலவச மருத்துவ பரிசோதனை முகாமில் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட கண் பரிசோதனைகளில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (203)



கரவெட்டி அரசினர் வைத்தியசாலையின் பற்சிகிச்சைப் பிரிவு அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. இப்பற்சிகிச்சைப் பிரிவை யாழ்.பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் நாடா வெட்டித் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம்.

படத்தில் கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் பற்சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.ஜெயராசா மற்றும் வைத்தியசாலையின் அபிவிருத்தி உறுப்பினர்கள் நிற்பதையும் காணலாம். *(படம் : குருநகர் செய்தியாளர்)*

## இடம்பெயர்ந்து சென்று

# மந்துவிலில் தங்கியுள்ள மக்கள் அடிப்படை வசதிகளின்றிச் சிரமம்

தென்மராட்சி,நவ.13

தென்மராட்சிப் பகுதியில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக மிருசுவில், நாவலடி, தவசிக்குளம் ஆகிய பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து மந்துவில் றோமன் கத்தோலிக்கக் கலவன் பாடசாலை வளாகத்தில் தங்கியுள்ள 20 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அடிப்படை வசதிகள் இன்றிப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இடம்பெயர்ந்த இக் குடும்பங்கள் பாடசாலைக் கட்டடத்திலேயே முதலில் தங்கியிருந்தனர்.

இந்நிலையில், மாணவர்களது கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள இடம் போதாமையால் அவர்களுக்கு தற்காலிகக் கொட்டகைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

இவ்வாறு அமைத்துக் கொடுக்கப்பட்ட கொட்டகைகளில் போதிய வசதிகள் இல்லாமையால் அங்கு குடியிருப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் அங்கு உறங்குவதற்கோ, ஏனைய வேலைகளைச் செய்வதற்கோ முடியாத நிலை காணப்படுகின்றது.

அத்துடன், நுளம்புத் தொல்லையும் அதிகரித்துக் காணப்படுகின்றது என்று மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இங்குள்ள 20 குடும்பங்களும் பாடசாலையில் உள்ள ஒரு கிணற்றையும், அங்குள்ள மலசலகூடங்களையுமே பயன்படுத்திவருகின்றன.

இதனால், சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-122)

## அபிவிருத்திச் சங்கங்களுக்கு ரூ.50 ஆயிரம் வீதம் கடன் உதவி

யாழ்ப்பாணம், நவ.13

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தால் கிறிஸ்தவ உதவி நிறுவனத்தின் நிதி உதவியுடன் அபிவிருத்திச் சங்கங்களுக்கு 50 ஆயிரம் ரூபா வீதம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பிரதேசத்தில் செயற்படுத்தப்பட்டுவரும் செயற்றிட்டங்களில் ஒன்றான மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் செயற்றிட்டம் ஊடாக இந்தக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

கைதடி மத்தி, மட்டுவில் வடக்கு, சந்திரபுரம் ஆகிய கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கே இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது. (203)

## வாசகர் திருமுகம்

## இந்து அமைப்புகள் மௌனம் சாதிக்கலாமா?

கடந்த 3 மாத காலமாக ஏ-9 பாதை மூடப்பட்டிருப்பதனால் யாழ். மக்கள் உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்களைப் பெறமுடியாமலும் தமது அன்றாட மற்றும் அவசிய பயணங்களை மேற்கொள்ள முடியாமலும் அவதிப்பட்டு அல்லலுறுவது கண்டும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்துமத அமைப்புகள் கண்டம் தெரிவிக்காவிட்டாலும் பரவாயில்லை. ஒரு வேண்டுகோளையாவது ஸ்ரீலங்கா அரசாங்கத்திடம் விடுக்காமல் ஏன் மௌனமாக இருக்கிறார்கள்?

யாழ்ப்பாண சரித்திரத்தில் முன்னெப்பொழுதும் தோன்றாத ஒரு நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது. அடைமழை ஏற்பட்டால் நிலைமை இன்னும் மோசமாகும். உலகெங்கணும் வாழும் தமிழர்களெல்லோரும் எமக்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்து கலக்கமடைந்துள்ளனர்.

கத்தோலிக்கத் திருச்சபையின் யாழ். ஆயர் அவர்கள் யாழ். நிலைமை குறித்து விளக்கி அண்மையில் விடுத்த அறிக்கை உலக செய்தி நிறுவனங்கள் மூலம் வெளியாகி உலகை விழிப்படைய வைத்துள்ளது. உலக நாடுகள் அரசுக்கு அழுத்தங்களைக் கொடுக்க ஆரம்பித்துள்ளன.

இந்நிலையில், இந்து மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட யாழ். குடாநாட்டில் ஆதீனம், சபை, பேரவை, ஒன்றியம் என விளம்பரப்பலகையைத் தொங்கவிட்டு சமயத்தை வளர்ப்பதாகக் கூறிக்கொள்ளும் இந்துமத அமைப்புகள் கோயில் தர்மகர்த்தா சபைகள் தற்போதைய தமிழ் மக்கள் அவலம் தொடர்பாகக் குரல்கொடுக்க முன்வரவேண்டும்.

மக்கள் வாழ்ந்தால் தானே மதத்தையும் வளர்க்கமுடியும்!

நீர்வேலி. **மா.பிரபாதாசன்**

## ஜனாதிபதியைத் தந்தி மூலமாக பாதையைத் திறக்கக் கேட்போம்

தற்போதைய சூழ்நிலையில் மக்கள் படும் அவல நிலையை மனதில் கொண்டு இதனை எழுதுகின்றேன்.

கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்றார் யேசுபிரான். எனவே, நாம் எங்களுக்காகக் கேட்போம். எங்கள் குழந்தைகளும் நாங்களும் பட்டினிச்சாவில் இருந்து தப்பவேண்டுமாயின் ஏ-9 பாதையைத் திறப்பது மிகவும் அவசியம் என்பதனை ஜனாதிபதியைத் தந்திமூலம் கேட்போம். குடாநாட்டில் இருந்து இலட்சக்கணக்கான தந்திகளை அனுப்புவதன்மூலம் ஜனாதிபதியை உணரச் செய்வோம்.

எங்கள் குழந்தைகளதும், எங்களதும் வயிற்றுப் பசிக்கு எதிராகவே இந்தக் கோரிக்கையை ஜனாதிபதிக்குச் சமர்ப்பிப்போம். யாழ். ஆயர் போல், குடாநாட்டின் குடிமகன் ஒவ்வொருவரும் தந்தியை அனுப்பிவைப்பதன் மூலம் அரசாங்கத்தின் கண் திறக்கும் என்று நம்புவோம்.

தந்தியின் வாசகங்கள் பின்வருமாறு அமையலாம்:-

''ஜனாதிபதி அவர்களே ஏ-9 வீதியை திறப்பதன் மூலம் எங்கள் குழந்தைகளைப் பட்டினிச்சாவில் இருந்து காப்பாற்றுங்கள்''

''உணவுக்காக நாம் படும் அவல நிலையைப் போக்க ஏ-9 வீதியைத் திறந்து போதியளவு உணவுவகைகளை எடுத்துவர உதவி செய்யுங்கள்''

''குழந்தைகளுக்கான போசாக்கு உணவுவகைகள், பிஸ்கற்வகைகள், நோயாளர்களுக்கான கொழுப்பு நீக்கிய பால்மா வகைகள் இன்றி துன்பப்படுகின்றோம்.''

**பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் சார்பில்**
**ம.பிரான்சிஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ஆவது பிறந்தநாள் அழைப்பு

## ம.சந்தோஸ்

13.11.2006



அன்புடையீர்!

நிகழும் விய வருடம் கார்த்திகை மாதம் 13ஆம் திகதி திங்கட்கிழமை (13.11.2006) பிற்பகல் 4 மணியளவில் திரு.திருமதி மயூரன் - மாலா தம்பதிகளின் செல்வப்புதல்வன் திருவளர் செல்வன்

## ம.சந்தோஸ்

தனது முதலாவது பிறந்ததினத்தை வெகுவிமரிசையாகக் கொண்டாட இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து செல்வனை ஆசிர்வதித்துச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு.திருமதி மயூரன் - மாலா தம்பதியினர்.

இறக்கம்பத்தை,
வல்வெட்டி.

தகவல்: சி.விக்கினேஸ்வரன் (மாமா).

---

# வாழ்த்துகின்றோம்



ஜெயந்தினி இலவச பாலர் பாடசாலை தலைவராகவும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி விளையாட்டுத்துறை முதல்வராகவும் அரிய பணியாற்றிய

**உயர்திரு. மு.நடராஜா**

அவர்கள் வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றமை குறித்து வாழ்த்துகின்றோம்.

ஜெயந்தினி இலவச பாலர் பாடசாலை, சுன்னாகம். (55 1)

திரு.திருமதி ஐ.சிவபாதசுந்தரம்
சி.மயூரதன் (ஸ்தாபகர்).

---

# அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் - வேலைவாய்ப்பு

இலங்கையில் முன்னணிக் காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான யூனியன் அஷ்யூரன்ஸ் லிமிட்டெட் பிரதேச ரீதியாக நேர்முகத் தேர்வு மூலம் காப்புறுதி பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யவுள்ளது.

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:
**யூனியன் அஷ்யூரன்ஸ் லிமிட்டெட்**
**139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
காலம்: 15.11.2006 புதன்கிழமை
நேரம்: **மு.ப.10 மணி தொடக்கம் பி.ப. 5 மணிவரை**



- 2005ஆம் ஆண்டு யூனியன் அஷ்யூரன்ஸ் யாழ். மாவட்ட பிராந்திய கிளையே அகில இலங்கை ரீதியில் முதலாம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.
- பயிற்சி நெறிகள் அனைத்தும் ஆரம்பத்திலிருந்து எமது நிறுவனத்தின் விசேட பயிற்றுவிப்பாளர்களால் மேற்கொள்ளப்படும்.
- இலங்கை காப்புறுதி நிறுவனத்தினால் நடத்தப்படும் காப்புறுதிப் பரீட்சையில் சித்தியடைகூடிய 100% உத்தரவாதம்.
- அதிகூடிய சம்பளம் பெறக்கூடிய வாய்ப்புகள்.
- வெளிநாட்டுச் சுற்றுப்பயணங்கள் மேற்கொள்ளக்கூடிய அரியவாய்ப்புகள்.
- வருடா வருடம் நடத்தப்படும் போட்டிகளில் சாதனை படைப்பதவர்களுக்குத் தங்கப்பதக்கங்களும் பெறுமதிமிக்க சான்றிதழ்களும் வழங்கப்படும்.
- உங்கள் திறமைக்கு ஏற்ப பதவி உயர்வுகள்
- மோட்டார் சைக்கிள், கார் போன்ற வாகன வசதிகள்.

நேர்முகத் தேர்விற்கு நேரடியாகத் தங்களுக்குரிய ஆவணங்களுடன் சமுகம் தரவும்.

**T.P.No.: 021 222 3753** (55027) பிராந்திய முகாமையாளர்.

---

# மனதார வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றும்

**திரு.இராசதுரை சாந்தகுமார்**

அவர்கள் இலங்கை உயர்தொழில் நுட்ப நிறுவனத்தின் H.N.D.A. பட்டம் பெற்றதையிட்டு அவருக்கு எமது பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன், அவர் மேன் மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

**கல்லூரி உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்.**

யா/சிதம்பராக் கல்லூரி,
வல்வெட்டித்துறை. (55139)

---

யாழ். - கொழும்பு விமான சேவைகள்
தனியார் நிறுவனத்தின் நான்கு பேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகிறது.

தொடர்பு: 0785788811 - 0785325501
0114964994 - Fax: 0112721789

---

# ON - LINE CLASSES

எமது நிறுவனத்தில் D.T.P & Graphics Design கற்கை நெறியானது On - Line மூலமாக நடைபெறுகின்றது.

| Subjects | Duration | Fee |
|---|---|---|
| Page Maker -7.0 | 20 hours | 1000/= |
| Coreldraw -12 | 20 hours | 1000/= |
| Photoshop -7.0 | 20 hours | 1000/= |
| Flash MX 2004 | 20 hours | 1000/= |

- நீங்கள் விரும்பிய நேரத்தில் கற்கலாம்
- Theory, Practical Books வழங்கப்படும்

**C.B Computer Academy**
T.P No. 021-4590291 Station Road, Kondavil.

---

# கண்ணீர் அஞ்சலி

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை முகாமையாளர் சி.பரமானந்தராசா அவர்களின் மனைவி

**திருமதி ப.பாலேஸ்வரி**

அவர்கள் 10.11.2006 இல் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணியாளர்,
சிக்கன சேமிப்புக் கடனுதவும் கூட்டுறவுச் சங்கம்,
ப.நோ.கூ.சங்கம், சங்கானை. (55158)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் திரு.நா.நாகேந்திரன் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி மகாலக்ஷ்மி நாகரத்தினம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்.**

யா/சிதம்பராகக் கல்லூரி,
வல்வெட்டித்துறை. (55140)

---

# சேவை நலன் பாராட்டு



கொழும்புப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் 36 ஆண்டுகள் சேவையாற்றி இன்று (13.11.2006) ஓய்வுபெறும்

**உயர்திரு. இ.ஜெகதீசன்**

(பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் - யாழ். பல்கலைக்கழகம், தலைவர் - அருள்மிகு பார்வதி சமேத ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயம்) அவர்களின் சேவைதனை நன்றியுடன் பாராட்டி ஓய்வுகாலத்தில் நோய், நொடிகளின்றி நலம்பல பெற்றுச் சிறப்புடன் வாழ பார்வதி சமேத ஸ்ரீ பரமேஸ்வரன் பாதார விந்தங்களைப் பணிந்திறைஞ்சி வாழ்த்துகின்றோம்.

வாழி! வாழி! வாழி!

''தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்''

வாழ்த்துவோர்:
பொன்.கந்தசாமி,
கனக.இரத்தினசபாபதி,
ப.பிருந்தாபன், சி.மகாராசா, க.கந்தசாமி.

(55149)

யோ.ஜெயக்குமார்,
நி.மயில்வாகனம்,
ஐ.கோ.சந்திரசேகரம்,
திருமதி தே.தங்கவேல்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

---

# முதலாம் வருட நினைவஞ்சலி



மண்ணில் 13 ★ 02 ★ 1927

விண்ணில் 13 ★ 11 ★ 2005

**அமரர் புஸ்பராணி இராஜரட்ணம்**

அன்பும் பாசமும் ஊட்டி வளர்த்தீர்கள்
ஆண்டு ஒன்று ஆனாலும்
அழியாது உங்கள் நினைவுகள்.

[கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள். வெளி. 14.33]

தேவாலய வீதி,
சங்கானை. (55146) - குடும்பத்தினர்.

---

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

830 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

கடகம் **01 12 35 40**

10-11-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 5528542 - 5542610

ஜக்பொட் பரிசு ரூபா.3,040,300/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 308,525 | 10/- | 3,085,250/- |
| 2 இலக்கங்கள் | 28,263 | 20/- | 565,260/- |
| 1 இல. + லக்கினம் | 27,920 | 30/- | 837,600/- |
| 2 இல. + லக்கினம் | 2,636 | 100/- | 263,600/- |
| 3 இலக்கங்கள் | 759 | 500/- | 379,500/- |
| 3 இல. + லக்கினம் | 66 | 5,000/- | 330,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,040,300/- | - |
| மொத்தம் | | | 5,861,210/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 368,178 | | 6,884,710/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,729,050/-

தொடர் இல.4655022 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2006 நொவெம்பர் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மொனராகலை | 5535048-3-87 |
| கொழும்பு | 5542444-0-54 |
| கொழும்பு | 5537515-7-96 |
| பொலன்னறுவை | 5529388-1-56 |
| அனுராதபுரம் | 5541134-3-16 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேன் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

---

**CSC-ASIAN** COMPUTER EDUCATION

**O/L or A/L சான்றிதழுடன் வாருங்கள் !**
**ஸ்கொலர்ஷிப் பெற்றுச் செல்லுங்கள் !**




பரீட்சை எழுதிய ஆண்டு, மொழி மற்றும் வயதெல்லை கட்டுப்பாடுகள் இல்லை

தொழில் பயிற்சி அமைச்சில் 1993ம் ஆண்டு முதல் பதியப்பட்ட கல்வி நிலையம்

**MERIT 2006**
Bring your Result Sheet

14 Years of Education Excellence

கீழ் குறிப்பிடப்பட்ட ஏதேனும் சான்றிதழ் ஒன்றின் பிரதியுடன் எமது பயிற்சி மையங்களை நாடுங்கள்.

பாடசாலை அதிபரினால் வழங்கப்பட்டது
பரீட்சை திணைக்களத்தால் வழங்கப்பட்டது
இணையம் மூலமாக பெறப்பட்டது

ICM ENGLAND · TATA-India NEXT GENERATION · Tally Authorised Academy

# ASIAN COMPUTER SYSTEMS

| யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் - CSC | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222 5677 | 101,2ம் மாடி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222 8196 | கண்டி வீதி சாவகச்சேரி. 077-3039587 | கொடிகாமம் ரோட், நெல்லியடி. 077-3122198 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# விசாரணை எனும் மாயமான்!

தமிழரின் தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தைத் தமது பௌத்த - சிங்கள மேலாதிக்க ஆணவப் போக்கில் கையாண்டு, தமிழரை அடக்கி, ஒடுக்கித் 'தீர்த்து'க் கொள்ளலாம் என்று அண்மைக் காலம் வரை மனப்பால் குடித்துக் கொண்டிருக்கும் தென்னிலங்கையின் நினைப்பில் - கனவில் - மண் விழுந்து விட்டது.

ஒக்ரோபர் 11 ஆம் திகதி முகமாலையில் அரச படைகளுக்கு ஏற்பட்ட பின்னடைவுடன் காற்று தமிழர் தரப்புக்கு - விடுதலைப் புலிகளுக்கு - சார்பாக வீசத் தொடங்கிவிட்டது போலும்.

களமுனையில் தோல்வி அல்லது பின்னடைவு மற்றும் ஆங்காங்கே இடம்பெறும் அசம்பாவிதங்களினால் கெட்ட பெயர் என்று அரசுத் தரப்பின் 'கீர்த்தி' உள்நாட்டிலும் சரி, சர்வ தேச மட்டத்திலும் சரி சாய்ந்து கொண்டிருக்கின்றது.

கிளிநொச்சி வைத்தியசாலை மீது குண்டு வீசி ஐந்து அப்பாவிகளைக் கொன்றமை, வாகரையில் அப்பாவி அகதிகள் தஞ்சம் புகுந்திருந்த பாடசாலை மீது கண்மூடித்தனமாக ஷெல், பீரங்கி மற்றும் பல்குழல் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தி ஐம்பதுக்கும் அதிகமானோரைக் கொன்றொழித்தமை, கடந்த வியாழனன்று வடக்குக் கடலில் பின்னடைவைச் சந்தித்தமை, கடந்த வெள்ளியன்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமை....... என அரசுத் தரப்புக்கு 'கீர்த்தியை' ஏற்படுத்திக் கொடுக்கும் பல்வேறு சம்பவங்கள் குறுகிய காலத்துக்குள் நடந்து முடிந்திருக்கின்றன.

வடக்கிலும், கிழக்கிலும் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தினசரி நடக்கும் படுகொலைகள், ஆயுத அச்சுறுத்தல் செயற்பாடுகள் மற்றும் கொழும்பிலும் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஏனைய இடங்களிலும் இடம்பெறும் ஆட்கடத்தல்கள், கப்பம் வசூலித்தல் போன்ற அராஜகங்களும் இவற்றுடன் சேர, கொழும்பு அரசின் 'கௌரவம்' இப்போது கொடி கட்டிப் பறக்கிறது.

சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்து வருகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்தும் உறுதியும், விருப்பும், திடசங்கற்பமும், இந்த அரசுக்கு இல்லை. அல்லது அதற்கான தகுதியும், திறமையும் அதற்கு இல்லை என்ற முடிவை எடுக்கும் நிலைக்குச் சர்வதேச சமூகம் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இந்தச் 'சீத்துவத்தில்' நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் படுகொலைச் சூத்திரதாரிகளை 'ஸ்கொட்லண்ட் யார்ட்' புலனாய்வாளர்களின் உதவியுடன் கண்டுபிடிக்கப் போவதாக அரசுத் தரப்பில் பெரிதாகப் பீற்றிக் கொள்ளப்படுகின்றது.

தென்னிலங்கை ஊடக ஊதுகுழல்களும் இந்தப் பிரசார நாடகங்களுக்கு நன்கு துணை போகின்றன. ரவிராஜ் எம்.பி. சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு அடுத்த நாள் வெளியான இரண்டு பிரபல ஆங்கில நாளிதழ்கள், ரவிராஜ் கொலைச் சம்பவத்தை முன்னிலைப்படுத்தாமல் அதற்குப் பதிலாக 'ரவிராஜ் கொலை தொடர்பாக ஸ்கொட்லாண்ட யார்ட் விசாரணை' என்றும் 'ரவிராஜ் கொலை புலன்விசாரணையில் முக்கிய முன்னேற்றம்' என்றும் முன்பக்கத் தலைப்புச் செய்தி வெளியிட்டிருந்தன. ரவிராஜ் படுகொலைச் செய்தியைத் தருவதை விட அது விடயத்தில் அரசின் கீர்த்தியைக் காப்பாற்றுவதுதான் அவற்றின் துடிப்பாக இருந்தது.

இது போன்ற பல விசாரணை அறிவிப்புகளைத் தமிழர்கள் கண்டு களைத்து - சளைத்து - போய்விட்டார்கள். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு பதவியேற்ற பின்னர் மாமனிதர் வி. விக்னேஸ்வரன் மற்றும் திருகோணமலையில் ஐந்து அப்பாவி மாணவர்கள் படுகொலை என்று தொடங்கி ரவிராஜ் எம்.பி. வரை அத்தகைய விசாரணை முஸ்தீபு பற்றிய ஆரவார அறிவிப்புகள் சம்பந்தமான பட்டியல் நீளும்.

இத்தகைய குற்றங்களுக்கான விசாரணைகள் பயனுள்ளவையாக அமைய வேண்டுமானால் - உண்மைக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, நீதி, நியாயப்படி விசாரிக்கப்பட்டு, உரிய வகையில் தண்டிக்கப்பட வேண்டுமானால் - 'மனமுண்டானால் இடமுண்டு' என்பது போல, அதற்கான திடசங்கற்பமும், பற்றுதியும் இந்த அரசுத் தலைமைக்கு இருக்க வேண்டும்.

ஆனால், இந்த அரசுக்கு அத்தகைய இதயசுத்தியுடன் கூடிய நோக்கம் உண்டா என்ற பலத்த சந்தேகம் தமிழர்களின் மனதில் ஆழ வேரூன்றியிருக்கும்போது, 'ஸ்கொட்லண்ட் யார்ட்' புலனாய் வாளர்கள் மட்டுமல்ல, கடவுளே நேரில் வந்து விசாரணை நடத்த முற்பட்டாலும் கூட, இந்த இலங்கைத் தீவில் - இத்தகைய குற்றங் கள் தொடர்பில் - நீதி நிலைநாட்டப்படும் என்றோ, குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர் என்றோ அல்லது இந்த அரசிடமிருந்து நியாயம் கிடைக்கும் என்றோ கிஞ்சித்தும் கூட எதிர்பார்க்க முடியாது.

திருகோணமலையில் ஐந்து அப்பாவி மாணவர்கள் கோரமாக - கொடூரமாக - தலைக்குப் பக்கத்தில் துப்பாக்கியை வைத்து - சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் தொடங்கி, ஜோஸப் பரராஜசிங்கம் எம்.பி., ரவிராஜ் எம்.பி. படுகொலை வரை தமிழர்களுக்கு எதிராக ஆயுத வன்முறை கட்டவிழ்ந்த சம்பவங்கள் அனேகம். அல்லைப்பிட்டியில், வங்காலையில், செஞ்சோலையில், கிளிநொச்சியில், வாகரையில் என்று அப்பாவி மக்கள் கொத்துக் கொத்தாகக் கொன்றொழிக்கப்பட்ட கொடூரங்களாக இம்மண்ணில் அரங்கேறிய சம்பவங்கள் பூலப்பல.

இவற்றில் எல்லாம் அல்லது பலவற்றில் - நேரடிக் குற்றச்சாட்டு அரச ஆயுதப் படைகள் மீதும், அவற்றின் கண்காணிப்பு மற்றும் வழிகாட்டலில் இயங்கும் ஒட்டுப்படைகள் மீதும்தான் வீழ்ந்துள்ளன.

அவர்களில் யாராவது இதுவரை இக்குற்றச்சாட்டுகளுக்கான சட்ட, ஒழுங்கு விசாரணைகளில் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட்டனரா? குறைந்த பட்சம் விசாரணை முடியும் வரையாவது வேலையிலிருந்து இடைநிறுத்தும் நடவடிக்கையாவது ஒருவர் மீதேனும் எடுக்கப்பட்டதா? அவ்வளவும் ஏன், இத்தகைய சம்பங்கள் தொடர்பில் பிரதேசக் கடமைப் பொறுப்பின் அடிப்படையில் தன்னும் ஓர் அதிகாரிக்கேனும் குறைந்த பட்சம் கட்டாய இடமாற்றம் தன்னும் வழங்கப்பட்டதா?

வெலிகந்தையில் முஸ்லிம்கள் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து அப்பிரதேச அதிரடிப்படை முகாம் அதிகாரியைக் கட்டாய இடமாற்றம் செய்ய முன்வந்த கொழும்பு அரசு, கடந்த ஓராண்டு காலத்தில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அனேக கொடூரங்களில் ஏதேனும் ஒன்றுக்காகவேனும் ஓர் அதிகாரியைத் தன்னும் இடமாற்றமேனும் செய்திருக்கின்றதா?

இந்தப் பின்னணியில்தான் - வாகரையில் அப்பாவித் தமிழ் அகதிகள் கூட்டமாகக் கொன்றொழிக்கப்பட்ட சம்பவம் குறித்து விரைந்து விசாரணை நடத்தி, தவறிழைத்தோரை சட்டத்தின் முன் நிறுத்துமாறு இலங்கை அரசை அமெரிக்கா, பிரிட்டன், நோர்வே, ஐராப்பிய ஒன்றியம் மற்றும் ஐ.நா. ஆகியவற்றை உள்ளடக்கிய சர்வதேச சமூகம் கோரியிருக்கின்றது.'

என்ன வேடிக்கை இது? போங்கள்!

# ரவிராஜ் எம்.பியின் படுகொலையை கண்டிக்கின்றன பொது அமைப்புகள்

யாழ்ப்பாணம்,நவ.13

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலைசெய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து சமய நிறுவனங்கள்,பொது நிறுவனங்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிக்கைகளை விடுத்துள்ளனர்.

அந்த அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

**அகில இலங்கை இந்து மாமன்றம்**

நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் படுகொலையை அகில இலங்கை இந்துமாமன்றம் கடுமையாகக் கண்டிக்கின்றது. அரசகட்டுப்பாட்டில் இருக்கும் பகுதியில் குறிப்பாக தலைநகரில் அதுவும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் உயிருக்கே பாதுகாப்பில்லை என்ற அபாயகரமான நிலை மிகவும் வேதனைக்குரிய விடயம்.

படுகொலைகளும் கடத்தல்களும் சகல வன்முறை நடவடிக்கைகளும் போரும் உடன்நிறுத்தப்படவேண்டும். அதற்கு தீர்க்கமான ஒரு முடிவை எடுக்க வேண்டும். போர்நிறுத்த ஒப்பந்தம் முழுமையாக அமுல்படுத்தப்படவும் ஏ-9 வீதி உடன் திறக்கவும் உடன் நடவடிக்கை எடுப்பதே அமரர் ரவிராஜ் அவர்களுக்கு செய்யக்கூடிய பொருத்தமான அஞ்சலியாகும்.

அகில இலங்கை இந்து மாமன்றச் செயற்பாடுகளில் அக்கறையுடன் பல வழிகளில் - குறிப்பாக மன்றம் மேற்கொண்ட ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளில் உதவிகள் பல புரிந்த உத்தமர். அமரர் ரவிராஜின் கொலை எமது சமூகத்திற்குப் பேரிழப்பாகும்.

**நீதி, சமாதான ஆணையகம்**

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டதையிட்டு யாழ்.மறை மாவட்ட நீதி சமாதான ஆணையகம் தனது அதிர்ச்சியையும் ஆழ்ந்த கவலையையும் வன்மையான கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்கின்றது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பெருந்தொகையான மக்களின் வாக்குகளைப் பெற்று உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட அவர் மும்மொழிகளிலும் தனக்கிருந்த புலமையாலும் ஆழ்ந்த அறிவாலும் வாதத்திறமையாலும் தமிழ் மக்களது பிரச்சினைகளை தொடர்ச்சியாக குறிப்பாக தென்னிலங்கை ஊடகங்களுக்கு வெளிப்படுத்தி வந்தார்.

சிங்கள மக்களுக்கு அவர்களது மொழியிலேயே தமிழ் மக்களின் பிரச்சினைகளை புரியவைக்க முயன்ற அவரது மரணம் இன்றைய இக்கட்டான சூழலில் தமிழ் மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும்.

அவரது படுகொலை இலங்கையில் கருத்துச் சுதந்திரமும் மாற்றுக் கருத்துக்களை மதிக்கும் மனப்பாங்கும் மிக மோசமான நிலையை அடைந்ததற்கு மேலும் ஒரு குறிகாட்டியாக அமைந்து விட்டது. தனது வாழ்வால் மட்டுமல்ல மரணத்தாலும் தமிழ்மக்களின் அவல நிலையை சர்வதேச அரங்கில் வெளிப்படுத்திச் சென்றிருக்கும் இவருக்கு நீதி சமாதான ஆணையகமும் தனது அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

**கஜேந்திரன் எம்.பி.**

இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கைத் தீவு முழுவதிலும் மேற்கொண்டுவரும் இன அழிப்பு நடவடிக்கைகளை சர்வதேச சமூகத்திற்கு அம்பலப்படுத்துவதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மிகத் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது. இந்தப் பணியில் முழுவீச்சுடன் செயற்பட்டு வந்தவர் ரவிராஜ் எம்.பி.

வாகரையில் அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை சர்வதேச சமூகத்திற்கு தெரியப்படுத்தும் நோக்குடன் ஐ.நா. சபையின் கொழும்பு அலுவலகத்திற்கு முன்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தியிருந்தது. மேற்படி சம்பவங்களில் எல்லாம் ரவிராஜ் எம்.பி. மிகவும் உணர்வுபூர்வமாகவும் ஆக்ரோஷமாகவும் பங்குகொண்டு சிங்கள அரச பயங்கரவாதத்தினை மிகக் கடுமையாக விமர்சித்திருந்தார்.

ஓர் ஜனநாயகக் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஜனநாயக வழிப் போராட்டங்களை ஜீரணிக்க முடியாத சிங்கள அரசு கோழைத்தனமான முறையில் இப்படுகொலையினைப் புரிந்துவிட்டு கண்துடைப்பிற்காக 'ஸ்கொட்லன்யாட்'டின் உதவியை கோரியுள்ளதாகக் கூறியுள்ளது.

மிலேச்சத்தனமான- காட்டுமிராண்டித்தனமான இப்படுகொலையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிக வன்மையாகக் கண்டிக்கின்றது. - என்று அதில் உள்ளது.

# படுகொலைக்குப் பின்னர் அரங்கேறிய அவலங்கள்!

கொழும்பு, நவ. 13

ரவிராஜ் எம்.பியின் படுகொலைக்குப் பின்னர் தென்னிலங்கையில் இடம்பெற்ற சில சம்பவங்கள் குறித்து கொழும்பின் முக்கிய பிரமுகர் ஒருவர் சில தகவல்களை வெளியிட்டார். அந்த உள்வீட்டுத் தகவல்கள் தென்னிலங்கையின் மனப்பாங்கை அம்பலப்படுத்துகின்றன என்றார் அவர். அவர் சொன்ன தகவல்கள் இவைதான்:-

✱ ரவிராஜ் படுகொலைக்கு எதிராக இன்று கொழும்பில் நடத்த ஏற்பாடாகியிருக்கும் கண்டனக் கூட்டத்துக்கு கொழும்பு மாநகரசபை மைதானம் வழங்கப்படுவதைத் தடுப்பதற்கு அரச உயர்மட்டத்திலிருந்து பெரிய அளவில் அழுத்தம், மாநகர நிர்வாகத்துக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ரவிராஜ் கொல்லப்பட்டமை குறித்து நீலிக் கண்ணீர் வடிக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த. ஆனால், ரவிராஜ் படுகொலையைக் கண்டித்து கூட்டம் போடுவதற்கு இடைஞ்சல் பண்ணுகிறது அவரது அரசுத் தலைமை.

கூட்டத்தை அங்கு நடத்துவதற்கு பெரிய பெரிய கைகளையெல்லாம் பிடித்து ஒருவாறு அனுமதி பெறுவதற்கான முயற்சி நேற்று கடைசிநேரம்வரை நீடித்தது.

✱ இந்தக் கண்டனப் பேரணிக்கும், கூட்டத்துக்கும் உரிய பாதுகாப்பு ஒழுங்குகளை ஏற்படுத்திக் கொடுக்கும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவரான இரா.சம்பந்தன், அரசின் பாதுகாப்புத் துறையுடன் சம்பந்தப்பட்ட அரசியல்வாதி ஒருவரைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கேட்டாராம். "அப்படிக் கூட்டம், பேரணி நடப்பதை யாராவது கல் எறிந்து குழப்பினால் அது ரவிராஜுக்கே அவமானமாகி விடும். அதைத் தவிர்த்துக் கொள்ளுங்களேன்." - என்ற சாரப்பட அந்த அரசியல்வாதிகளிடமிருந்து பதில் வந்ததாம். கொதித்துப் போனார் சம்பந்தர்.

"ரவிராஜைத்தான் கொன்று விட்டீர்கள். இதற்கு மேல் அவரை அவமானப்படுத்த உங்களுக்கு என்ன இருக்கிறது. ஆகவே, அந்தக் கவலையை விட்டு விட்டு பாதுகாப்பு, ஒழுங்குகளைப் பாருங்கள்." - என்றாராம் சம்பந்தர்.

✱ சுட்டுக் கொல்லப்பட்ட ரவிராஜ் எம்.பி. ஒரு சட்டத்தரணி. மனித உரிமைகள் சட்டங்களுக்காக வாதிட்டவர். முன்னாள் அரச சட்டத் தரணியும் கூட. வழக்கு ஒன்றில் வாதாடுவதற்காக நீதிமன்றத்துக்குச் சென்று கொண்டிருக்கையிலேயே அவர் சுட்டுப் படுகொலை செய்யப் பட்டார்.

ஆனால், அவரது படுகொலையைக் கண்டித்து அறிக்கை விடுவதற்கு சட்டத்தரணிகளின் அமைப்பு ஒன்று மறுத்துவிட்டதாம்.

வீட்டில் வைத்து சிங்கள நீதிபதி சுட்டுக் கொல்லப்பட்டபோது பெரிய ஆரவாரம் பண்ணி, கண்டன அறிக்கை விட்டு கவலைப்பட்ட இச்சங்கம், தமிழ்ச் சட்டத்தரணி ஒருவர் நீதிமன்றுக்கு வருகையில் சுடப்பட்டதைக் கண்டிக்கப் பின்னடிக்கிறது. இதுதான் சட்டத்தரணிகள் அமைப்பின் நீதி போலும் என்று மனம் வெதும்புகிறார் ஒரு மூத்த சட்டத்தரணி.

# ஆரையம்பதியில் இளைஞர் சுட்டுக்கொலை

கொழும்பு, நவ.13

காத்தான்குடி - ஆரையம்பதி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார். கொல்லப்பட்டவர் கிருஷ்ணபிள்ளை மோகனதாஸ் (வயது-23) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

காயமடைந்தவரான அமிர்தலிங்கம் டினேஸ்கர் (வயது-22), மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

ஆரையம்பதியிலுள்ள பஸ் தரிப்பு நிலயம் ஒன்றில் நின்று கொண்டிருந்த போதே இவர்கள் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தி விட்டுச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த)

## நாளை

ஐப்பசி 28
செவ்வாய்க்கிழமை
14.11.2006
திதி : நவமி
மாலை : 5.30
நட்சத்திரம் : மகம்
பிற்பகல் : 12.38
சுபநேரம் : 10.37 - 12.07
ராகுகாலம் : 03.07 - 04.37

# வினாத்தாள் வந்துசேராததை அடுத்து தரம் 9 பொதுப் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,நவ.13

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் தரம் 9 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான பொதுப் பரீட்சை அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைபெறவிருக்கின்றது என கல்வியமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

பரீட்சைக்கான வினாத்தாள்களை அனுப்புவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே பரீட்சை பிற்போடப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்துக்குகான வினாத்தாள்கள் தபால் மூலம் அனுப்புவதற்கு தபால் திணைக்களத்தில் கையளிக் கப்பட்டுள்ளன என்றும் -

இந்த வினாத்தாள்கள் ஓரிரு தினங்களில் இங்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் -

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நேர சூசிகையின் அடிப்படையில் பரீட்சைகள் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைபெறும் என்றும் -யாழ். கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பரீட்சை நாளை முதல் 18ஆம் திகதி வரை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (1)

# மாத்தளையில் தேடுதல் 6 தமிழர்கள் கைது

மாத்தளை, நவ.13

மாத்தளைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்ட திடீர் தேடுதல் நடவடிக்கையின்போது சந்தேகத்தின் பேரில் இரு பெண்கள் உட்பட 6 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று மாத்தளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட 6 பேரும் இன்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் தங்களின் அடையாளங்களை உறுதிப்படுத்துவதற்குப் போதுமான ஆதாரங்களை வைத்திருக்கவில்லை என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# வினாத்தாள் வந்துசேரவில்லை விவேகானந்த சபைப் பரீட்சை நேற்று நடைபெறவில்லை

யாழ்ப்பாணம்,நவ.13

வினாத்தாள் வந்துசேராததை அடுத்து கொழும்பு விவேகானந்த சபையினால் வருடாந்தம் நடத்தப்படும் சைவசமய அறிவுப் பரீட்சை நேற்றையதினம் யாழ். மாவட்டத்தில் நடைபெறவில்லை.

இதனால் மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கென நேற்றுக்காலை பாடசாலைகளுக்குச் சமுகமளித்த மாணவர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

மேற்படி பரீட்சைக்கான வினாத்தாள் பொதிகள் கொழும்பில் இருந்து நேரடியாக பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவது வழமையா கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகலில் ஒரு கிலோமீற்றர் தூரம் சென்று மீன் பிடிப்பதற்கு அனுமதி கிடைக்கும்

## பலாலி படைத் தலைமையக அறிக்கையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.13

★குடாநாட்டில் சிலருக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் நிவாரணம் போதியதாக இல்லை. எனவே இது விடயமாக அரசிற்கு தெரியப்படுத்தி நிவாரணமாக வழங்கப்படும் பொருள்களின் அளவை அதிகரித்து வழங்குவது குறித்து மிக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

★யாழ்.மீனவர்கள், அடுத்துவரும் கிழமையில் பகல்வேளைகளில் கடலில் ஒரு கிலோ மீற்றர் தூரம் சென்று மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.

★ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களின் நலன் கருதி இரவு நேரத்தில் மின்சாரம் வழங்கப்படும் நேரத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த வியாழக்கிழமை பலாலி படைத் தலைமையகத்தில் நடைபெற்ற சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் மேற்படி விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன என்று பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் நேற்றிரவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத் தளபதி மேஜர் ஜெனரல் பீ.ஏ.சந்திரசிறி, வடக்கு கடற்படைத் தளபதி றியல் அட்மிரல் ஜே.எச்.யு.ரணவீர, யாழ்.உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எச்.ஏ.விக்ரமசிங்க மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளும் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் சிவில் சமூகப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

உணவுப் பொருள்களை முறையாகவும், கட்டுப்பாட்டு விலைக்கு வழங்குவதற்கும் என இராணுவத்தினர் வர்த்தக நிலையங்களைத் திறந்துள்ளனர் என்றும் -

யாழ்.வர்த்தகர்களும் நியாய விலையில் பொருள்களை விற்பனை செய்ய முன்வந்தால் மக்களுக்கு அது உதவியாக இருக்கும் என்றும் - இந்தச் சந்திப்பில் உரை நிகழ்த்திய மாவட்ட படைத்தளபதி தெரிவித்தார்.

குடாநாட்டு மக்களுக்கான சேவைகள் எதுவித தடைகளும் இன்றி தொடர்ந்து நடைபெறவேண்டும் என்று தெரிவித்த படைத் தளபதி இதற்காக படைத் தரப்பின் உதவி தேவைப்பட்டால் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அதனைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் கூறினார் - என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில் நேற்றும் பூரண கதவடைப்பு

வவுனியா,நவ.13

வாகரையில் அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் -

வவுனியாவில் நேற்று இரண்டாவது நாளாகவும் பூரண கடையடைப்பும், பணிப்புறக்கணிப்பும் நடத்தப்பட்டது.

இன்று மூன்றாவது நாளாகவும் கடையடைப்பும், பணிப்புறக்கணிப்பும் இடம்பெறும் என்று தமிழ்த் தேசியப்படை அறிவித்துள்ளது.

## கப்பல் பயணிகள் தெல்லிப்பழைக்கு

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு கப்பல் மூலம் பயணம் செய்வதற்கென சுமார் 300 பேர் நேற்று தெல்லிப்பழைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஈழத் தமிழர் மீதான இராணுவத் தாக்குதலைக் கண்டித்து தமிழகம், திருநெல்வேலியில் நேற்று ஆர்ப்பாட்டம்

இலங்கையில் தமிழர்கள் மீது இலங்கை இராணுவத்தினர் நடத்திவரும் தாக்குதலைக் கண்டித்து தமிழகம் திருநெல்வேலியில் நேற்று ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

திராவிடர் கழகம் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

தமிழ்நாடு - திருநெல்வேலி நவீன சந்தை அருகே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் கழக மாவட்டத் தலைவர் டேவிட் செல்லத்துரை தலைமை வகித்தார்.

கட்சியின் பொதுக்குழு உறுப்பினர் பாமா முன்னிலை வகித்தார். நிர்வாகிகள் தங்கத்துரை, கே.சுடலையாண்டி, சி.வேலாயுதம், டி.ஜெயக்குமார், முருகன், சேகர், பொன்ராஜ் உள்ளிட்ட பலரும் இதில் கலந்துகொண்டனர்.

இலங்கையில் தமிழர்கள் மீது இராணுவத்தினர் கொலை வெறித் தாக்குதல் நடத்தி வருவதைக் கண்டித்தும் -

இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் - இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாக திராவிடர் கழகம் அறிவித்துள்ளது.

## வாகரைப் படுகொலை தாக்குதல்

# இணைத் தலைமை நாடுகள் அரசிடம் விசாரித்தன

இலங்கை அரசாங்க அதிகாரிகளுக்கும் இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலானசந்திப்பு ஒன்று கடந்த வியாழக்கிழமை வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் வாகரையில் தமிழ் அகதிகள் தங்கியிருந்த பாடசாலைகள் மீது இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து இணைத் தலைமை நாடுகள், இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிடம் கேட்டறிந்ததாகத் தெரியவருகிறது.

இந்தக் கூட்டத்தில் வெளிவிவகார அமைச்சர் மங்கள் சமரவீர கலந்துகொள்ளவில்லை. மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

சிறிலங்காவுக்கான அமெரிக்கத் தூதுவர் றொபெர்ட் ப்ளேக், ஜப்பானிய தூதுவர் கியோசி ஆரெக்கி, நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் ஜேர்மன் தூதுவர்ஜர்கென் வீர்த், ஐரோப்பிய ஒன்றிய தூதுவரக பிரதித் தலைவர் பீற்றர் மகெர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிறிலங்கா அரசாங்கத்தரப்பில் அமைச்சர்கள் மகிந்த சமரசிங்க, கெகலிய ரம்புக்வெல, அனுர பிரியதர்சன யாப்பா, சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோகென்ன, முப்படைத் தளபதி டொனால்ட் பெரேரா, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, வெளிவிவகார அமைச்சு பதில் செயலாளர் கீதா டி சில்வா ஆகியோர் பங்கேற்றனர்.

வாகரை தாக்குதல் குறித்து இணைத் தலைமை நாடுகளின் தூதுவர்களுக்கு சரத் பொன்சேகா விளக்கமளித்தார்.

பொதுமக்கள் கொல்லப்பட்டது தொடர்பில் அரசாங்கம் ஆழ்ந்த வருத்தம் கொள்கிறது. ஆனால் பொதுமக்களை விடுதலைப் புலிகள் பயன்படுத்தாது இருந்தால் இதனைத் தவிர்க்கலாம் - அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இந்தக்கூட்டத்தைத் தொடர்ந்து இணைத் தலைமை நாடுகளின் தூதுவர் தமது அறிக்கையை எதிர்வரும் 17ஆம் திகதி வாஷிங்டனில் நடைபெறவுள்ள இணைத்தலைமை நாடுகள் கூட்டத்திற்கு அனுப்பி வைப்பர் என்று தெரியவருகிறது. (அ)

## பருத்தித்துறை கடற்கரையில் நான்கு சடலங்கள் ஒதுங்கின

உடுப்பிட்டி, நவ.13

பருத்தித்துறையில் சுப்பர்மடத்துக்கும் இன்பருட்டிக்கும் இடையிலான கடற்கரையோரத்தில் நேற்று நான்கு சடலங்கள் கரையொதுங்கியிருக்கின்றன.

கடந்த வியாழக்கிழமை வடமராட்சிக் கடலில் இடம்பெற்ற கடற்சமரின்போது உயிரிழந்தோரில் மூன்று கடற்படையினரது சடலங்களும் கடற்புலி உறுப்பினர் ஒருவருடைய சடலமுமே இவை என்று கடற்படையினரை மேற்கோள்காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த கடற்படையினரின் சடலங்களைத் தேடும் நடவடிக்கையில் கடற்படை அணி ஒன்று நேற்றுமுன்தினமும், நேற்றும் ஈடுபட்டது என்று தெரிவிக்கப்பட்டது. இந்தத் தேடுதலின்போதே இந்தச் சடலங்கள் மீட்கப்பட்டன என்றும் கூறப்பட்டது. (155)

## இராணுவத் தளபதி வவுனியாவுக்கு விஜயம்

வவுனியா,நவ.13

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வவுனியாவுக்கு வந்திருந்தார்.

உயர் அதிகாரிகளுடன் இங்கு வந்த இராணுவத்தளபதி வவுனியாப் பிரதேசத்தின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து இங்குள்ள கள அதிகாரிகளுடன் ஆராய்ந்தார்.

வன்னிப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளிடம் இருந்து வரக்கூடிய அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கான திடீர் எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து இங்கு விரிவாக ஆரயப்பட்டதாக இராணுவத் தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

வவுனியா வருவதற்கு முன்னர் இராணுவத் தளபதி வெலிஓயாவுக்கும் சென்று அங்குள்ள பாதுகாப்பு நிலைமையை அதிகாரிகளுடன் ஆராய்ந்தார். (அ)

### இன்று கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாட்டில் நேற்றுக்காலை கொழும்பு இலங்கை மன்றக்கல்லூரியில் நடைபெற்றது. இதில் பல அரசியல் கட்சிகளினதும் சிவில் அமைப்புகளினதும் பிரதிநிதிகள் கலந்துகொண்டு உரையாற்றினர். (உ)

### நேற்று வரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்கள் கிடைத்துள்ளன'' - என்று தெரிவிக்கும் குற்றப் புலனாய்வுப் பொலிஸார், கொலைச் சூத்திரதாரிகள் மிக விரைவில் கைதுசெய்யப்படுவர் எனவும் நம்பிக்கை தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட 20பேரும் தொடர்ந்தும் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர் என்றும் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெயசுந்தரா வெளியிட்ட தகவலில் தெரிவித்ததாவது-

ரவிராஜ் கொலை தொடர்பாக வெள்ளவத்தையில் ஒருவரைக் கைது செய்தோம். அவர் கொடுத்த தகவல் அடிப்படையில் பொரளை, கறுவாத்தோட்டம் ஆகிய பகுதிகளில் தேடுதல் வேட்டை நடத்தி மேலும் 7 பேரைக் கைதுசெய்துள்ளோம். கொலையாளிகளை நேரில் பார்த்த பல சாட்சிகள் உள்ளன.

கொலைக்கு முன்பு ரவிராஜுடன் தொலைபேசியில் பேசியவர்கள் பற்றியும் அவர்களது உரையாடல் பற்றியும் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

கொலையாளி வந்த மோட்டார் சைக்கிளின் எண் ஜே.இ.3500 என்றும் தெரிய வந்துள்ளது. 2 பேர் இந்தக் கொலையை செய்துள்ளனர். கொலையாளிகள் விட்டுச் சென்ற துப்பாக்கி மற்றும் ஹெல்மெட்டும் சிக்கியுள்ளது. - என்றார். (அ-த)

### பிரிட்டிஷ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்புவார் என பிளயர் தெரிவித்திருந்தார்.

ரொனி பிளயரின் சிறப்புப் பிரதிநிதியான போல் மேர்பி வட அயர்லாந்தின் இராஜாங்க அமைச்சு முன்னாள் செயலாளர் ஆவார். வட அயர்லாந்தின் அரசியல் அபி விருத்தி அமைச்சராகவும் இவர் பணியாற்றியவர்.

வட அயர்லாந்து பிரச்சினைக்கு முடிவு எட்டப்பட்ட புனித வெள்ளி ஒப்பந்தம் உருவாக இவர் முக்கியமான பங்காற்றியவர்.

இங்கிலாந்தின் பொதுச்சபையின் பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத்துறைத் தலைவராக தற்போது போல் மேர்பி பொறுப்பு வகித்து வருகிறார். (த)

### வாகரையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் வாழைச்சேனையில் உள்ள இராணுவத்தினர், தாங்கள் மக்கள் பகுதி கள் மீது தாக்குதல் எதனையும் நடத்தவில்லை என்றும் தம்மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை முறியடிக்கும் நடவடிக்கையையே - இனங்காணப்பட்ட இலக்குகள் மீதான தாக்குதல்களையே - மேற்கொண்டதாகவும் தெரிவித்தனர்.

கஜுவத்தை, மாங்கேணி ஆகிய இடங்களில் உள்ள விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள் மீது விடுதலைப் புலிகள் வெள்ளிக்கிழமை அதிகாலை தொடக்கம் தொடர்ந்து தாக்குதல்களை நடத்திவந்ததாகவும் நேற்று அதிகாலை படையினர் மீதான கடும் தாக்குதல்கள் ஆரம்பமாகியதாகவும் இராணுவத் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் தமது பதில் தாக்குதல்களினால் விடுதலைப் புலிகள் பின்வாங்கிச் சென்றுவிட்டனர் என்றும் கூறப்பட்டது.

வாகரையிலிருந்து 15 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கதிரவெளிப் பகுதியில் இம்மாதம் எட்டாம் திகதி புதன்கிழமை இடம்பெயர்ந்தோர் தங்கியிருந்த விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் மீது இராணுவத்தினர் நடத்திய எறிகணைத் தாக்குதல்களால் 50 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டதும் 120 பேர் காயமடைந்ததும் தெரிந்தவையே.

தமிழ் மக்கள் இராணுவத்தினரால் படுகொலைசெய்யப்பட்டதை இணைத் தலைமை நாடுகள் உட்பட பல வெளி நாடுகளும், ஐ.நாவும் கண்டித்துள்ளன.

அதன் மத்தியிலும் மீண்டும் அதே பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள பிரதேசங்கள் மீது நேற்றும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. (அ)

### மாமனிதர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் அங்கு அஞ்சலிக் கூட்டம் நடைபெறும். இதில் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் பலரும் உரையாற்றுவர்.

அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து மீண்டும் றேமண்ட் மலர்ச்சாலைக்கு எடுத்துச் செல்லப்படும். பூதவுடல் பின்னர் நாளை செவ்வாய்க்கிழமை காலை விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

தொடர்ந்து மாமனிதர் ரவிராஜின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் புதன் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஞ்சலி நிகழ்வுகளின் பின்னர் பூதவுடல் தனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

**ரணில் தம்பதியர் நேரில் சென்று அஞ்சலி**

இதற்கிடையில் - பொரளை றேமண்ட் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டுள்ள மாமனிதர் ரவிராஜின் பூதவுடலுக்கு ஐக்கியதேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமது பாரியார் சகிதம் நேற்று நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். அமைச்சர்களான நிமால் ஸ்ரீபால டி சில்வா, ஆறுமுகம் தொண்டமான், ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க உட்பட அரசியல் பிரமுகர்கள் பலரும் நேற்று ரவிராஜ் எம்.பியின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர். (1)

### யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பான ஐ.நாவின் இறுதிமுடிவை இன்றைய சந்திப்பின்போது ஐ.நா. அதிகாரிகள் தெரிவிப்பர் என்று கூறப்பட்டது. (த)

BRAIN POWER INSTITUTE
LOGIC
A\L DAY CLASS
Mon., Tue. 8-10 மணி
ஆரம்பம் 13.11.2006
A\L 2007
Sat., Sun. 10-12 மணி
ஆரம்பம் 18.11.2006
A\L 2008
Sat., Sun. 9-10 மணி

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.11.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org